Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்


சுடர் : 39
கதிர் : 164

புதன்கிழமை
08 மே 2024

சித்திரை 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொழுகை

முச்சந்தி முரளி



"போற போக்கைப் பார்த்தால் எந்தத் தேர்தலை முதல்ல வைக்கிறதெண்டதுக்கே ஒரு தேர்தல் வைப்பினம் போலக் கிடக்கு"

அரசமைப்பின் பிரகாரம்

# ஜனாதிபதித் தேர்தலே இவ்வருடம் நடக்கும்!

## வேறெந்தத் தேர்தலுக்கும் இடமில்லை

## ஆளுங்கட்சி கொறடா பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்

**கொழும்பு, மே 8**

**அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர வேறு எந்தத் தேர்தலும் இவ்வருடம் நடைபெறாது என ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

15



## முதலில் பொதுத்தேர்தலா? நிராகரித்தார் ரணில்

### மொட்டுக் கட்சிக்கு ஏமாற்றம்

கொழும்பு, மே 8

நாடாளுமன்றத்தை மே 15 ஆம் திகதிக்கு முன்னர் கலைத்து பொதுத்தேர்தலுக்குச் செல்லுமாறு பொதுஜன பெரமுன விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்

15



## உள்ளகப் பயிற்சிக்காக நடவடிக்கைகள் தேவை

யாழ்ப்பாணம், மே 8

உள்ளகப் பயிற்சியை வழங்குவதற்கு உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறுகோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெறியேறிய சித்தமருத்துவ மாணவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

15



## இளையவர்கள் சிந்திக்கும்படியாகவே நினைவேந்தல் இடம்பெறவேண்டும்

### நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் தினம் உட்பட எமது நினைவேந்தல்களை இளையவர்கள் சிந்திக்கும்படியாகவும், இளையவர்களுக்குப் பல செய்திகளைக் கடத்தும் படியாகவும் நடத்தவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய

15

## ஜே.வி.பி. பிளவுறும்

### பெரமுன ஆரூடம்

கொழும்பு, மே 8

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. விரைவில் பிளவடையும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆரூடம் கூறியுள்ளது.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்

15

யாழ். மாவட்டத்தில்

## 65 கிராம அலுவலர்கள் ஜனாதிபதியால் நியமனம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 65 கிராம அலுவலர்கள் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

கிராம அலுவலர் நியமனத்துக்காக நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் பொதுநிர்வாக உள்நாட்டு

15

## கருத்துச் சுதந்திரத்தில் கைவைக்க முடியாது!

### நாடாளுமன்றத்தில் சஜித் முழக்கம்



கொழும்பு, மே 8

இலங்கை என்பது பொலிஸ் இராஜ்ஜியமல்ல. கருத்துத் தெரிவித்தமைக்காகவெல்லாம் ஒருவரை விசாரணைக்கு அழைக்கமுடியாது என்று நாடாளுமன்றத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்.

15

## ஊர்காவற்றுறையில் மிதிவெடிகள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 8

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை, சரவணை மேற்குப் பகுதியிலேயே மேற்படி மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

## மணல் அகழ்வு: ஆறு பேர் கைது

கிளிநொச்சி, மே 8

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் சட்ட

15

## மல்லாகம் கொல்களத்துக்கு 'சீல்' வைத்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், மே 8

மல்லாகம் பகுதியில் உரிய அனுமதிகளின்றி இயங்கிவந்த கொல்களம் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய நேற்றுச் 'சீல்' வைத்து மூடப்பட்டது.

15



மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மழலை இயற்கை ஆர்வலனாக தாவடி தமிழ்க்கலவன் மாணவன்

கொழும்பு, மே 8

தேசிய ரீதியில் மழலை இயற்கை ஆர்வலர்களாக தெரிவுசெய்யப்பட்ட 10 மாணவர்களில் ஒருவராக தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த மயூரன் அஜேராவ் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை தேசிய விஞ்ஞான மன்றமும், நிரல் கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலை மாணவர் மத்தியில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் முகமாகப் பல்வேறு போட்டிகளை நடத்தி அதில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களை கடந்த சில ஆண்டுகளாகத் தேசிய ரீதியில் கௌரவித்து வருகிறது.

இவ் வருடத்துக்கான கௌரவிப்பு விழா கடந்த 30ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட கலையரங்கில் இடம்பெற்றது.

தரம் - 6 மாணவரிடையே தேசிய ரீதியில் 10 சிறார்கள் மழலை இயற்கை ஆர்வலராகத் தெரிவாகினர். இப் பத்து மாணவரில் ஒருவராக தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மயூரன் அஜேராவ் தெரிவு செய்யப்பட்டார். (ஒ-100-159)

அபிவிருத்தி அலுவலரை நோக்கி கேள்வி:

# ஈ.பி.டி.பி. உறுப்பினரால் பெண்ணுக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், மே 8

**பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கேள்வி எழுப்பிய சனசமூக நிலைய பெண் உறுப்பினரை, ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்று அறிமுகப் படுத்தியவர் அச்சுறுத்தியுள்ளார் என தெரிவித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

சனசமூக நிலையத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் நவாலி வடக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரை மேற்படி பெண் சந்தித்து கலந்துரையாடி தமக்குரிய திட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளார்.

வேறு திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டமை தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதிலளித்துள்ளார். அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது அதற்குரிய ஒப்பந்தத்தை தமது சனசமூக நிலையம் ஊடாக மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்துவிட்டு அவர் வெளியேறியுள்ளார்.

இதன் பின்னர் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு தன்னை ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்று அறிமுகப்படுத்தியவர், மேற்படி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருடன் கலந்துரையாடிய விடயத்தைக் குறிப்பிட்டு அது தொடர்பில் என்ன பிரச்சினை என்று கேள்வி எழுப்பியதுடன் அச்சுறுத்தியு ள்ளார்.


இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சனசமூக நிலையப் பெண் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடமும் அவர் நேற்றுக்காலை இது தொடர்பில் முறைப்பாடளித்துள்ளார். (ஒ-125)

இலங்கைக்குள்

## கொண்டுவரப்பட்டார் பாதாளக்குழு புள்ளி

கொழும்பு, மே 8



பாதாளக்குழுவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவனாகக் கருதப்படும் 'மன்னா ரமேஷ்' எனப்படும் ரமேஷ் பிரிஜானகா நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட பொலிஸ் குழு, சந்தேகநபரை டுபாயில் கைதுசெய்து நேற்று அதிகாலை அழைத்து வந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அண்மைக்காலமாக பல கொலைகள் இவருடைய வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. சந்தேகநபர் தொடர்பில் குற்றப் புலனாய்வுத்திணைக்களம்மேலதிகவிசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. (ச-இ)

## மனிதப்பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சியுடன் கைது

புளியங்கூடல் பகுதியில் மனித பாவனைக்கு உதவாத 11 கிலோ மாட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-125)

## நாடாளுமன்றக் கட்டடத்தில் திருத்த வேலைகள்

கொழும்பு, மே 8

நாடாளுமன்றக் கட்டடத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

40 வருடங்கள் பழமைவாய்ந்த நாடாளுமன்றக் கட்டடத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளவேண்டிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியுடன் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ட-6)

## இலவச அரிசி இன்மையால் கிராம அலுவலர் மீது தாக்கு

கொழும்பு,மே 8

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இலவச அரிசி கிடைக்கப்பெறாத நபரொருவரின் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் கிராமஅலுவலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பாணந்துறை பிரதேசத்தில் அண்மையில் நடந்துள்ளது..

இலவச அரிசி கிடைக்கப்பெறாமையால் குறித்த நபர் கிராம அலுவலருடன் முரண்பட்டு மோதலில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-555)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின்

## பொதுமுகாமையாளராக தமிழர் ஒருவர் தெரிவு



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் பொது முகாமையாளர் பதவிக்கு மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி. பாரதிதாசன் என்பவரே நேர்முகத்தேர்வின் மூலம் தகுதிபெற்றுள்ளார்.

1992 ஆம் ஆண்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையில் பொறியியலாளராக பணியில் இணைந்துகொண்ட அவர் பதில் முகாமையாளர், மாவட்ட முகாமையாளர், பிராந்திய முகாமையாளர், வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் மற்றும் சமூக அடிப்படையிலான கிராமிய குடிநீர் வழங்கல் திட்டம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான குடிநீர் விநியோக சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களின் திட்டப்பணிப்பாளராகவும். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கிகளின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் திட்டப் பணிப்பாளராகவும், பல பதவிகளை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-214)

# யாழ். போதனா மருத்துவமனை மீது அவதூறு பரப்பியவர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், மே 8

யாழ். போதான மருத்துவமனைக்கு எதிராக செய்தி பரப்பியவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனயாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சமூக ஊடகம் மூலம் போதனா மருத்துவமனைக்கு எதிராக அவதூறு பரப்பி காணொலி வெளியிட்டவருக்கு எதிராக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அவர்மீது திணைக்கள ரீதியான விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.

இது தவிரவும் இவ்வாறான செய்தி, திசைப் பதற்றத்தை, பயத்தை போதனா மருத்துவமனை மீது ஏற்படுத்திவிடும் என்பதற்காக நாம் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம். இதன் காரணமாக மூன்று தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட உத்தியோகத்தர் மீது பொலிஸ் விசாரணை இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக வழக்குத் தாக்கல் செய்வது என மருத்துவமனை நிர்வாகம் தீர்மானித்திருக்கின்றது.

குறைபாடுகள் கேட்டறிந்து நிவர்த்தி செய்யப்பட்டாலும் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலே நாம் இதனை மேற்கொண்டு வருகின்றோம். அவற்றை அபிவிருத்தி செய்வதற்காகவும் பல்வேறு முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். பொது மக்கள் உள்ளே வருகின்ற பொழுது மிகவும் கண்ணியமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றார். (ஒ-125-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி மதுபானசாலை விவகாரம்: நீதிமன்றத்தை நாடிய சமூக அமைப்புகள்

யாழ்ப்பாணம், மே 8

**மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி உடுப்பிட்டி இமையாணன் மேற்குப் பகுதியில் திறக்கப்பட்ட மதுபானசாலை தொடர்பில் உடுப்பிட்டியைச் சேர்ந்த ஆறு சமூகமட்ட அமைப்புகளும், மூன்று தனிநபர்களும் இணைந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.**

மதுபானசாலை பாடசாலை, மதத் தலங்களுக்கு அண்மையாகவும், குடிமனைகளுக்கு மத்தியிலும் அமைந்துள்ள நிலையில் பாடசாலை மாணவர்கள், வீதியால் பயணிப்பவர்கள் மற்றும் அயலவர்களுக்குத் தொடர்ச்சியான அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கருத்திற் கொண்டு ஏற்கனவே உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலையத்தில் பிரதேச சமூகமட்ட அமைப்புகள் ஒன்று கூடி மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாக ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரனூடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுமந்திரனின் சமர்ப்பணத்தையடுத்து எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்புவதற்காகவழக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுடன், சட்டத்தரணி மயூரனும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

கடந்த வருடத்தின் பிற்பகுதியில் திறக்கப்பட்ட குறித்த மதுபான சாலை மக்களின் போராட்டத்தையடுத்து மூடப்பட்டிருந்தது.

இந் நிலையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கூறியமையால் தான் மதுபான சாலைக்கான பரிந்துரையை மீள வழங்கியதாகப் பிரதேச சமூகமட்ட அமைப்புகளிடம் கரவெட்டிப் பிரதேச செயலர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஏற்கனவே பிரதேசசபை குறித்த மதுபானசாலைக்கு எதிராக மற்றொரு வழக்கொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த வழக்கும் தற்போது நிலுவையிலுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-66)

## மருமகனின் தாக்குதலில் மாமனார் உயிரிழப்பு

வவுனியா, மே 8

மதுரா நகரில் மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான 45 வயதான மாமனார் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவருக்கும் இடையில் நீண்ட நாள்களாக கருத்து முரண்பாடுகள் இருந்து வந்துள்ளன. இந்நிலையில் வெளியில் சென்றுவிட்டு நேற்றுமுன்தினம் மாலை வீடு திரும்பிய மாமன் மீதே மருமகன் தன் நண்பனோடு சேர்ந்து கோடரியால் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கின்றது. படுகாயமடைந்த மாமனாரை உறவினர்கள் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கொலையில் ஈடுபட்ட சந்தேகத்தில் மருமகனும் அவரது நண்பனும் கைதுசெய்யப்பட்டுள்ளார். சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-110,18)



## கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், மே 8

கசிப்புடன் இருவரை யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக காக்கைதீவில் 750 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரை மானிப்பாய் பொலிஸாரும் வட்டுக்கோட்டை மேற்கில் 750 மில்லி லீற்றர் கசிப்புடன் மற்றுமொருவரை வட்டுக்கோட்டை பொலிஸாரும் கைது செய்தனர். (ஒ-125)

## மரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 8

புத்தூர்ப் பகுதியில் மரத்திலிருந்து தவறிக் கீழே வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புத்தூர் மேற்கு சிவன் கோவிலுக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. செல்லமுத்து சிவலிங்கம் (வயது-62 ) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரத்தின் கிளைகளை வெட்ட மரத்தில் ஏறியபோதே அவர் தவறி விழுந்துள்ளார். இறப்பு விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ச-555-26)

## பரீட்சைக்குச் சென்ற மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, மே 8

சாதாரண தரப் பரீட்சைக்குச் சென்ற மாணவன் ஒருவன் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாங்கொட - மரதென்ன பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

குறித்த மாணவன் பரீட்சை நிலையத்துக்குச் செல்வதற்கு முன்னதாக ஆலயமொன்றுக்குச் சென்றிருந்த நிலையில், வழியில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## 5 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

வவுனியா, மே 8

புளியங்குளம் சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் திடீர்ச் சோதனையை, தாண்டிக்குளத்தில் முன்னெடுத்தபோது, மோட்டார் சைக்கிளில் சூட்சுமமாக மறைத்துக்கொண்டு செல்லப்பட்ட 5 கிலோ 124 கிராம் உயிர் கொல்லி கஞ்சாவை மீட்டதுடன் சந்தேகத்தில் செக்கட்டிப்பிலவைச் சேர்ந்த 26 வயதான இளைஞனையும் கைதுசெய்தனர். (ஒ-110)

## தினம் தெரியுமோ?

**வெளிநாட்டுச் சொக்கிலேட் எண்டால் ஆருக்குத்தான் விருப்பமிருக்காது? ஆனால் அதைச் சாப்பிடுறதெண்டால் வெளிநாட்டுக்காரர் வரும் மட்டும் தவம் கிடக்கவேணும். அதுவும் இப்ப வாற வெளிநாட்டுக்காரர் கடையளில் போய் எந்த பிஸ்கட் பெட்டி மலிவாக் கிடைக்குதோ அதை வாங்கிக் கொண்டந்திட்டு கையை விசுக்கிக் கொண்டு போடுவினம், வெளிநாட்டுச் சொக்கிலேட் கிடைக்குமெண்டு நாக்கில நீர் ஊறக் காத்திருக்கிறவை கடைசியாக் கிடைக்கிறது உந்த மாரி பிஸ்கட்தான்.**

**இப்பிடிச் சனம் வெளிநாட்டுச் சொக்கிலேட்டுக்கு அந்தரப்படுகிறதைப் பார்த்த பிஸ்னஸ்காரர் சும்மா இருப்பினமோ? இப்பதானே சொடுக்குப் போடுற நேரத்தில வெளிநாட்டில இருந்து என்னத்தையும் கொண்டந்திடலாம். அதால வெளிநாடுகளில பேமஸான சொக்கிலெட்டுகளையெல்லாம் இஞ்சையுள்ள சுப்பர்மார்க்கெட்டுகளில இறக்கி, அடுக்கி வைக்கத் தொடங்கிச்சினம். அதிலையும் ஒரு றிக்ஸ் இருக்குது. உந்த வெளிநாட்டுச் சொக்கிலேட்டுகளை உள்ளுக்க அடுக்க மாட்டினம். காசு கட்டிற கவுண்டருக்குப் பக்கத்திலதான் கண்ணைக் குத்துற மாதிரி அடுக்கி வைச்சிருப்பினம். பிள்ளையளோட அந்தக் கடையளுக்குச் சாமான் வாங்கப் போறவை காசு கட்ட கவுண்டருக்குப் போகேக்க, பிள்ளையளின்ர கண்ணில அந்தச் சொக்கிலேட்டுக்கள் படாமல் இருக்காது. பிறகென்ன, எப்பிடியும் அதுகளின்ர ஆய்க்கினையால கடைக்காரர் என்ன விலை சொல்லுகினமோ, அதைக் கட்டிப்போட்டு சொக்கிலேட்டுகளை அடுக்கிக் கொண்டு வரவேண்டியதுதான்.**

**ஆசை மெல்ல மெல்ல பேராசையாகேக்க தான் பிரச்சினை தொடங்கும். வெளிநாட்டுச் சொக்கிலேட்டுகளை இறக்கி, நாலைஞ்சு மடங்கு லாபத்தோட வித்தவைக்கு கை சும்மா இருக்காது. இதைவிட லாபம் பாக்கவேணும் எண்டு துடிக்கும். அதுக்கு என்ன வழி? கொஞ்சக்காசில சொக்கிலேட்டை வாங்கினால் லாபம் கூடும். ஆனால் வெளிநாட்டில சொக்கிலேட்டை வாங்கி, அதுக்கு கொண்டுவாற கூலி குடுத்து, வரி கட்டி கொண்டந்தால் எப்பிடி கொள்வனவுக்காசைக் குறைக்கமுடியும்? ஆனால் இப்பிடி பேராசை பிடிச்சு அலையிறவைக்கு உதவி செய்யவெண்டே கொழும்பில ஒரு கூட்டம் இருக்கு. எல்லாத்துக்கு 'டுப்ளிகேட்' சாமான் செய்யிற சின்னச் சீனா கொழும்பில இயங்குது. அந்தச் சின்னச் சீனாவில வெளிநாட்டுச் சொக்கிலேட் மாதிரி லேபிள் ஒட்டி, இஞ்சத்தை சொக்கிலேட்டுகளை உள்ளுக்க வைச்சு குடுப்பினம். அப்பிடிக் குடுக்கேக்க அந்தச் சின்னச் சீனாக்காரர் இன்னும் லாபம் பாக்கிறதுக்காக, டேட்போன (காலாவதியான) சொக்கிலேட்டுகளை கொஞ்சக் காசுக்கு வாங்கி , அதின்ர லேபிள் கவரை எல்லாம் உரிச்சுப்போட்டு, இந்த வெளிநாட்டுச் சொக்கிலேட் கவரை ஒட்டிக் குடுப்பினம். அது தெரியாமல் மலிவாக் கிடைக்குது எண்டு சில கடைக்காரர் வாங்கியந்து விக்கிறவை. அப்பிடி வெளிநாட்டுச் சொக்கிலேட் எண்டு நினைச்சு, இஞ்சத்தை சொக்கிலேட்டை வித்த சிலர் பிடிபட்டு இருக்கினம். அதைவிடப் பகிடி என்னெண்டால், எங்கட உள்ளூர் சொக்கிலேட்டை நூறு ரூபா குடுத்து வாங்க மனமில்லாதவை, அதே சொக்லேட் டேட் முடிஞ்ச பிறகு, வேற லேபிள் ஒட்டி வரேக்க ஆயிரம் ரூபா குடுத்து வாங்கிச் சாப்பிட்டிருக்கினம். வெளிநாட்டுச் சொக்கிலேட்டை இஞ்ச வாங்கிறவை கொஞ்சம் அலேர்ட்டா இருங்கோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)



சுக்கிரனை ராசிநாதனாகக் கொண்ட ரிஷபராசிக் காரர்கள், தன் அழகைப் பராமரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். மனத்தில் ஆயிரம் இருந்தாலும் அவ்வளவு எளிதாக அவர்களின் பேச்சில் அது வந்துவிடாது. சாமர்த்தியமான பேச்சுக்குச் சொந்தக் காரர்கள். அப்படிப்பட்ட ரிஷபராசிக்காரர்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களைத் தரும் என்பதைப் பார்ப்போம்.




குருபகவான் இதுவரை 12 ஆம் வீட்டில் அமர்ந்து கட்டுக்கடங்காத செலவுகளைக் கொடுத்துக்கொண்டிருந்த குருபகவான் தற்போது ராசிக்குள்ளேயே வருகிறார். ஜன்ம குரு பலவிதமான தடைகளை ஏற்படுத்துவாரோ என்கிற கலக்கத்தோடு இருந்தீர்கள் என்றால் அவற்றை விட்டுவிடலாம். பகைவீட்டில் அமர்ந்தாலும் குருபகவான் நற்பலன்களையே தருவார். இதுவரை செலவுகளால் வாடியிருந்த உங்கள் மனம் மலரும். நன்மைகள் தேடிவரும்.

ராசிக்கு 5 ஆம் வீடான பூர்வ புண்ணிய ஸ்தானத்தை குருபகவான் பார்ப்பதால் குடும்பத்தில் நற்பலன்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் பற்றிய கவலைகள் விலகும். தடைப்பட்ட சுபகாரியங்கள் தேடிவரும்.

ராசிக்கு 7 ம் வீட்டை குருபகவான் பார்ப்பது மிகவும் அற்புதமான விஷயம். குடும்பத்தில் இதுநாள்வரை இருந்த பிரச்சினைகள் விலகும். அமைதி பிறக்கும். கணவன் - மனைவிக்கிடையே இருந்த ஈகோ பிரச்சினை விலகி கருத்தொற்றுமை ஏற்படும். திருமண முயற்சிகள் கைகூடும்.

ராசிக்கு 9 ம் வீட்டை குருபகவான் பார்ப்பதால் தந்தையின் ஆரோக்கியம் மேம்படும். அவர் மூலம் எதிர்பார்த்த பணம் வரும். பூர்வீகச் சொத்து தொடர்பான பிரச்சினைகளில் சாதகமான தீர்ப்பு வரும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

01.05.2024 முதல் 12.06.2024 வரை உங்கள் சுகாதிபதியான சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் வீடு மனை அமையும். பெற்றோரின் உடல்நிலை சீராகும். புது வாகனம் வாங்குவீர்கள். இழுபறியாக இருந்த அரசு வேலைகள் சாதகமாக முடிவடையும். 12.06.2024 முதல் 19.8.2024 வரை மற்றும் 02.12.2024 முதல் 05.04.2025 வரை உங்கள் சேவகாதிபதியான சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள்சேரும். இளைய சகோதரர் பாசமாக நடந்துகொள்வார். சகோதரிக்குத் திருமணம் கூடி வரும். திடீர் பயணங்களும், செலவுகளும், வந்துபோகும். 19.08.2024 முதல் 02.12.2024 வரை மற்றும் 05.04.2025 முதல் 14.05.2025 வரை உங்கள் சப்தம விரையாதிபதியான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் மனைவி வழி உறவினர்களால் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும்.

**வியாபாரம்**

சந்தை நுணுக்கங்களை கற்றுக் கொண்டு பெரிய முதலீடுகளைச் செய்யுங்கள். புதிய துறையில் முதலீடு செய்ய வேண்டாம்.

உத்தியோகத்தில் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். கௌரவப் பதவிகள் வரும். சக ஊழியர்கள் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசினாலும் அவர்களைப் பகைத்துக் கொள்ளவேண்டாம். மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

**இந்த குரு பெயர்ச்சி சவால்களைச் சந்திக்க தேவையான சாமர்த்தியத்தையும், சகிப்புத்தன்மையையும், பணவரவையும் தரும்.**

# ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை மீளக்கட்டியெழுப்பப்படவேண்டும்

## மக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே 8

மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான்ஓட்டுத்தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலையை கடந்த காலப் போரின் பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து இதுவரை மீள இயங்கவைப்பதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

கடந்த காலங்களில் பல நூற்றுக் கணக்கான மக்கள் இந்த ஓட்டுத் தொழிற்சாலையினூடாக தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொண்டிருந்தனர். பலரது வாழ்க்கைக்கு வழியமைத்துக் கொடுத்த இந்த ஓட்டுத் தொழிற்சாலை இன்று பற்றைகள் சூழ்ந்து தேடுவாரற்றுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி செயலிழந்துள்ள ஒட்டுசுட்டான் தொழிற்சாலையை மீளக்கட்டியெழுப்பவேண்டும்.

அதனூடாக இங்குள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-500)

# பெருந்திருவிழா

சாவகச்சேரி, மே 8

சாவகச்சேரி – சரசாலை வடக்கு நுணாவில் சிதம்பர விநாயகர் கோவில் பெருந்திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். பெருந்திருவிழாக் கிரியைகள் இராஜேஸ்வர கிருஷ்ணராம் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-9)

# கிராம அலுவலர்கள் ஆட்சேர்ப்புப்பட்டியல்

கிராமஅலுவலர் தரம் - 3 க்கான புதிய ஆட்சேர்ப்பு விவரப் பட்டியல் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்புக்கான பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தகுதி பெற்ற ஆயிரத்து 942 விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moha.gov.lk இல் குறித்த பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால்சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.



**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாகமுடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் பணியாளர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.



**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவர்களுடன் பேசும் போது வார்த்தைகளில் நிதானம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.



**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில்சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். சிறிது அலைச்சல் ஏற்படக் கூடும். கந்தக் கடவுளை வழிபடுவது நன்று.



**சிம்மம்:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். நல்ல செய்தி வந்து சேரும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு சுமாராகத்தான் இருக்கும். பைரவரை வழிபடுவது நலம் சேர்க்கும்.



**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். பிரச்சினைகளை சாதுர்யமாகச்சமாளித்துவிடுவீர்கள்.



**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் பணியாளர்கள் உற்சாகத்துடன் செயற்படுவார்கள்.



**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.



**தனுசு:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு.



**மகரம்:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். சிலருக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.



**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். செல்வு செய்யவேண்டி வரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.



**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் திகதிக்குப் பின் தாழமுக்கம் உருவாகும்

யாழ்ப்பாணம், மே 8

எதிர்வரும் 13ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கைக்குத் தெற்கே வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது என்றும், இவ்வாண்டின் முதலாவது தாழமுக்கமாக இது அமையும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வானிலையாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான நாகமுத்து பிரதீபராஜா இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

13ஆம் திகதியளவில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கமொன்று உருவாகச் சாத்தியமுள்ளது. ஆனாலும், இந்தக் காலத்தில் தோன்றுகின்ற தாழமுக்கங்கள் பங்களாதேஷ் அல்லது மியன்மாரை நோக்கியே செல்வதுண்டு. இதனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும்.

அத்துடன் இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு வெப்பச் சலனம் காரணமாக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இந்த மழை வெப்பச் சலன மழை என்பதனால் இடி மின்னலுடன் இணைந்ததாகவே இருக்கும். எனவே, இடி மின்னல் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது நிலவும் அதிகமான வெப்ப நிலை தற்காலிகமாக எதிர்வரும் வாரம் சற்றுக் குறைவாக இருக்கும். எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளில் தற்போது நிலவும் அதிகளவிலான வெப்பநிலையே தொடரும் என்றுள்ளது.

(ம-66)

# விசா கையாள்தல்: அதிகாரம் எம்மிடமே

## குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, மே 8

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசா அனுமதித்தல், விநியோகித்தல் மற்றும் விநியோகிக்கா திருத்தல் ஆகிய அதிகாரங்களை சர்வதேச நிறுவனத்துக்கு வழங்கவில்லை. எழுந்துள்ள தவறான கருத்துகள் தொடர்பில் தெளிவு அவசியம்.

இவ்வாறு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய அறிவித்துள்ளார்.

திணைக்களத்தால் நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்பமின்மையால் புதிய வழிமுறையை அறிமுகப்படுத்துவதற்கான தேவை தோற்றம் பெற்றது. புதிய விசா முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்தச் சிக்கல்களை கையாள வி. எப்.எஸ். நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற முன்மொழி வானது அமைச்சரவையின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப் பட்ட குழுவுக்கு முன்வைக்கப்பட் டது. எனினும் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசா அனுமதித்தல், விநியோகித்தல் அல்லது விநியோகிக்காமலிருத்தல் அதிகாரம் இந்த நிறுவனத்துக்கு வழங்கவில்லை.

இந்தப் புதிய செயற்றிட்டம் தொடர்பில் சமூகத்தின் மத்தியில் பரப்பப்படும் தவறான நிலைப்பாடு மாற்றப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 11 . 1939



மறைவு
07 . 05 . 2024

## சோமசுந்தரம் பரமசிவராசா

(ஓய்வுபெற்ற கமநலசேவை உத்தியோகத்தர், சமாதான நீதவான் - JP)

யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், யாழ். நீராவியடியை வசிப்பிடமாகவும், கொண்ட சோமசுந்தரம் பரமசிவராசா நேற்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பு - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜிதா, வினோதா, விவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதீஸ்வரன், சுரேந்திரன், தட்ஜாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், டர்ணிகா, சுலோஜன், தனோஜன், சானா, சாஜீசன், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம், கமலம், ரெத்தினம், கனகராசா, மனோன், புனிதம், செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கனகசபை, சதாசிவம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2024) வியாழக்கிழமை (8/1, புகையிரத தெற்கு வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 724 0431

நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(CS/54979) J-1



# 31ஆம் நாள் நினைவலைகள்



மண் மகிழ 05.03.1942
மண் நெகிழ 09.04.2024

## அமரர் பரராஜசிங்கம் ஸ்ரீபாலச்சந்திரன்

நிஜமான வாழ்க்கை
நிஜமற்று போனாலும்
நிழலாய் எம்மோடு
நிஜமாய் வாழ்ந்திடுவீர்

அன்னாரது அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (09.05.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக் கொள்ளவும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 08.04.2024 திங்கட்கிழமை அன்று
சிவபதப்பேறடைந்த எமது குடும்பத் தலைவி

## பவானி விஸ்வலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
**இன்று 08.05.2024 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில்**
அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**72/9, பனிக்கர் லேன்,**
**பலாலி வீதி, திருநெல்வேலி**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**
**077 824 9234**

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**விளம்பர ஒலிபரப்பு சேவை (நவீன சந்தை கட்டடத்தொகுதி - மேல்மாடி), பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை, பண்ணை கடற்கரைப்பூங்கா என்பன குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - | ரூபா 1,180.00 (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - | 08.05.2024 – 21.05.2024 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணிவரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | 22.05.2024 மு.ப 10.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - | 22.05.2024 மு.ப10.00 மணிக்கு |

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 22.05.2024 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப் பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கேள்வி சமர்ப்பிப்பவர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக் கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. குத்தகை தொடர்பான நிபந்தனைகளை அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

| இல | விபரம் | குத்தகைக் காலம் | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | விளம்பர ஒலிபரப்பு சேவை (நவீன சந்தை கட்டடத்தொகுதி - மேல் மாடி) | 01.06.2024 - 31.12.2024 | 10,000.00 | 533,166.66 |
| 2 | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 23.06.2024 - 31.12.2024 | 10,000.00 | 522,222.22 |
| 3 | பண்ணை கடற்கரைப்பூங்கா | 01.07.2024 - 31.12.2024 | 2,000.00 | 102,500.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலை பேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் – பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை ,**
**யாழ்ப்பாணம்.**

(cs.42383) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01
01
1951



மறைவு
05
05
2024

## திருமதி கமலாதேவி கிருபானந்தன்

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கிருபானந்தன் அவர்கள் கடந்த (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணேசு-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் கிருபானந்தனின் அன்பு மனைவியும் நிஷாந்தன் (கனடா), பிரசாந்தன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சுகாதார அமைச்சு, வட மாகாணம்), பிரசாந்தி (பிரான்ஸ்), தனுஷன் (ஆசிரியர்-கிளி/ பரமன்கிராய் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வளர்மதி (கனடா), அஜிந்தா (ஆசிரியர்-வவு/ பன்றிக்கெய்த குளம் அ.த.க பாடசாலை), தவறூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவீன், அனன்ஜா, நிலவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் யோகசவுந்தரி, இராசலட்சுமி, சிவசுப்பிரமணியம், தர்மேஸ்வரி, சிவசக்தி, சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**குமரகோட்டம்**
**கோண்டாவில்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 910 3611**

# மரண அறிவித்தல்

தோற்றம்
09
07
1943



மறைவு
07
05
2024

## E.S.பியதாச

கொழும்பைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை வீதி, 1ஆம் ஒழுங்கை மற்றும் 132 பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட எறபத்தகொட சிங்கசே பியதாஸ (ஓய்வு பெற்ற சிங்கள மகா வித்தியாலய ஆசிரியர் மற்றும் திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்) அவர்கள் நேற்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அயொனிஸ் - ரொஸ்லின் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் (SLT) பாசமிகு கணவரும், சிறிசேன, காலஞ்சென்றவர்களான ஜினடாச, தர்மடாச மற்றும் லீலா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் கமலநாயகி, காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனரும், சந்திரபாலன், ஸ்ரீநந்தினி, சமிந்த, றூபினி, றஜிக, நதீகா, றுவான் ஆகியோரின் பெரிய தந்தையும், வரதராசா (குஞ்சன் மாருதி டிரேடிங் சென்ரர்), யசோதாவின் மாமனாரும், சர்மி, அபிநயா, திவ்யா, ஒனயா, ரஜின்யா, செதுக்கி, அனுதி, டுலினா, ருனால், அத்வி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 03.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 0153, 076 976 3357**

(CS 00440) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நெஞ்சில் எரியட்டும் நீதியின் நெருப்பு

தமிழர்களுக்கு வலிகளையும் - வேதனைகளையும் தந்த மாதம், இந்த மே மாதம் . 15ஆண்டுகளுக்கு முன்னர் ஒடுக்கப்பட்ட குறுகிய நிலப்பரப்புகள் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாற்திசையும் சிறிலங்கா படைகளால் முற்றுகையிடப்பட்டிருந்த காலம். மூச்செடுப்பதற்குக்குக்கூட சுத்தமான காற்றில்லை. அந்தக் காற்றெங்கும் கந்தகநெடியும், பிணவாடையுமே நிறைந்திருந்தன. குருதிதோய்ந்த மண்ணும், அவலக்குரலும் மாத்திரமே எஞ்சிக் கிடந்த சூழல் அது. தமிழ் மண்ணில் பிறந்ததைத்தவிர வேறெந்தப் பாவமும் செய்யாத பிஞ்சுகள் கொத்துக் குண்டுகளால் கொல்லப்பட்ட அவலங்கள் அரங்கேறி 15ஆண்டு கடக்கப்போகின்றது.

கண்முன்னே பெற்றோரைப் பறிகொடுத்த குழந்தைகள், மனைவியின் கண்முன்னே கணவன் துடிதுடித்து உயிரிழந்த அவலம், கணவன் முன்பாக மனைவி உயிர்மாய்த்த சோகம் எனப் பெரும் துயரைத்தந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கடைப்பிடிக்க தமிழர் தாயகம் தயாராகின்றது. கடந்த 14 ஆண்டுகளாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எந்த நெருக்கடி வந்தாலும், நினைவுகூர்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். தங்கள் இழப்பு நீதிகோரிய அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கின்றார்கள். வலிகளை ஏற்படுத்திய அந்தப் பேரழிவை அடுத்த சந்ததிக்கு சொல்லிக்கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் நீதிக்கான போராட்டமோ கழுதை தேய்ந்து கட்டெறும்பாவதைப் போன்று தேய்ந்து செல்கின்றது. நினைவேந்தலுக்கான எழுச்சியும் அடுத்தடுத்த தலைமுறைகளிடம் குன்றிச் செல்கின்றது. எதைச் சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கின்றதோ அதற்கு உடந்தையாகிச் செல்கின்றது எமது இளம் சமூகம். காலத்தை இழுத்தடிப்பதன் ஊடாகவும், மடைமாற்றத்தின் ஊடாகவும் நீதி கோரிய பயணத்தை சிலர் திசை திருப்பத்துடிக்கின்றனர். அவலங்களை மறந்து களியாட்டங்களுக்குள் இளம்சமூகத்தை தள்ளிவிடுகின்றனர். முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிரிழந்தது எம் உறவுகள்தான். அந்த உறவுகளின் உடலங்கள் மீது இன்று கொண்டாட்ட மனநிலையில் எமது இளம் சமூகம் இருப்பது வேதனைக்குரியது.

அரசியல் கட்சிகளால் நினைவேந்தல் என்பது தமது வாக்குப்பொறுக்குவதற்கான நிகழ்வு என்ற வரையறைக்குள் சுருங்கிவிட்டதால், நீதிக்கான பயணத்தை அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். வாக்குக்காக நினைவேந்தல்களை நடத்துவதால் நினைவேந்தலின் ஓர்மம் - அதன் ஆன்ம பலம் என்பனவும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. நினைவேந்தல்கள் என்பவை எங்களுக்கு நடந்தவற்றை அடுத்த சந்ததிக்கு வெறுமனே எடுத்துச் சொல்லுவதாக மாத்திரம் இருக்கக்கூடாது. அந்த வலியை அவர்கள் மனதார உணரவேண்டும். அவ்வாறானதொரு கொடுமை தங்களுக்கு ஏற்பட்டிருந்தால் எப்படியிருக்கும் என்பதை அறியவேண்டும். அதைச்செய்வதன் ஊடாகவே, இந்த நினைவேந்தல்களை அர்த்தமுள்ளதாக்கலாம். அவ்வாறு அர்த்தமுள்ளதாக்குவதன் ஊடாகவே அதன் நீதிக்கான போராட்டமும் உத்வேகம் உடையதாக மாறும். நீதி கோரும் நெஞ்சத்து நெருப்பு அணையாமல் இருக்கும். கடந்த 14 ஆண்டுகளில் இதைச் செய்யத் தவறியதன் விளைவே இன்று எமது கையிலிருந்து நீதிக்கான பயணம் வழிமாறிச் செல்வதற்குக் காரணம். இம்முறையாவது கடந்த காலத் தவறுகளைக் களைந்து ஆத்மார்த்த ரீதியாக நினைவேந்தல்களை முன்னெடுக்கவேண்டும். கடமைக்காக வெறும் பகட்டுக்காக நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதை விடுத்து அதை உளப்பூர்வமாக ஒவ்வொருவரும் நினைவுகூரவேண்டும்.



# வெளிநாட்டவர் விசா; மாற்றம் எதுவுமில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

**கொழும்பு, மே 8**

**வெளிநாட்டவர்கள் இந்த நாட்டுக்கு வரும்போது 30 நாள்களுக்கான விசாவுக்காக ஒருவரிடம் அறவிடப்பட்ட 50 டொலர் என்ற பழைய கட்டணத்தைத் தொடர்ந்தும் பேண அமைச்சரவை தீர்மானித்துள்ளது.**

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா, ரஷ்யா, ஜப்பான், மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய ஏழு நாடுகளுக்கு இதுவரை வழங்கப்பட்ட இலவச விசா சேவை அதேபோல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)

# டிஜிற்றல் நிலையுருமாற்ற கல்விமுறை நடைமுறை

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 8

இலங்கையின் பொதுவான கல்வி முறையை டிஜிற்றல்நிலையுருமாற்றம் செய்வதற்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உத்தேசக் கருத்திட்டத்தின் மூலம் மிடுக்கான பார்த்தறியும் திரையுடன் கூடிய வகுப்பறை, மிடுக்கான ஏற்புப் பரப்பு திரையுடன் கூடிய வகுப்பறை, குறித்த பணிகளை நெறிப்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் கீழ் தரவு மையம், ஒளிப்பதிவு அறை, மாநாட்டு அறை போன்றவற்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய சாத்தியவளக் கற்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# மறியலில் தொடர்ந்தும் கெஹலிய

கொழும்பு, மே 8

தரமற்ற மருந்துக் கொள்வனவு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 பேரும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை மீளவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# கைபேசி வங்கிச்சேவை எச்சரிக்கை அவசியம்

கொழும்பு, மே 8

கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி வங்கிச் சேவையில் ஈடுபடும்போது இடம்பெறும் மோசடி தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு இலங்கை வங்கிச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே நம்பமுடியாத கவர்ச்சிகரமான தள்ளுபடிகள் மற்றும் சலுகைகளை வழங்கும் ஒன்லைன் விளம்பரங்களில் அதிகம் கவனம் செலுத்துவதைத் தவிர்க்கவும். சில இணைப்புகளைக் 'கிளிக்' செய்வதையும் அல்லது கோப்புகளைப் பதிவிறக்குவதையும் தவிர்க்கவும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# விரைவில் 3000 தாதியர்கள் சேவையில்

கொழும்பு, மே 8

புதிதாக 3 ஆயிரம் தாதியர்களை சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தாதியர் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் நிறைவடைந்துள்ளன.

மேன்முறையீட்டுக் காலத்தின் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நாளை

09.05.2024

**வியாழக்கிழமை**

**சித்திரை - 26**

சுபநேரம் : 07.24 - 08.54

ராகுகாலம் : 01.24 - 02.54

## நாளொரு நல்வார்த்தை

**போலிக்குத்தான் பரிசும் பாராட்டும்...**
**உண்மைக்கு ஆறுதல் பரிசு மட்டுமே...**

**சார்லி சப்ளின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலச் சூழலே இப்போதும் வடக்கில்

## துப்பாக்கிச்சூடுதான் இல்லை

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

துப்பாக்கிச்சூடுதான் தற்போதில்லை. மற்றும்படி தமிழர் தாயகத்தில் தற்போதும் போர்க்காலச் சூழலே நிலவுகின்றது - என்று நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற ரெலோ அமைப்பின் மேதின நிகழ்விலேயே செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-வடமாகாணத்தில் பல்வேறு துறைசாராருக்கு இந்த அரசாங்கம் உரிய தீர்வை வழங்கவில்லை. முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினை நீண்டகாலமாக இழுபறிப்படுகின்றது. அவற்றுக்கு இன்னமும் சரியானதொரு தீர்வு வழங்கப்படவில்லை. முன்பள்ளி ஆசியர்கள் தங்களின் சொந்தச் செலவில்தான் பல்வேறு காரியங்களை ஆற்றுகின்றனர். எங்களுடைய மாகாணசபை சிறப்பாகச் செயற்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினைகளை நிவர்த்தித்திருக்க முடியும். இதற்கு நானும் பொறுப்பு. இனத்தின் விடுதலைக்கு உணர்வால் ஒன்றித்திருந்ததைப் போன்று தொழிலாளர் உரிமைக்காகவும் நாம் ஒன்றுபடவேண்டும். இன்றைக்குத் துப்பாக்கிச்சூடு கள்தான் இங்கில்லை. மற்றும்படி போர்க்காலச் சூழல்தான் நிலவுகின்றது - என்றார். (ம-125)



யாழ்.மாவட்டத்தில் வெள்ளரிப்பழ சீசன் ஆரம்பமாகியுள்ள நிலையில், மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ளரிப்பழ வியாபாரம் சூடுபிடித்துள்ளது. தற்போது மாவட்டத்தில் கடும் வெப்பத்துடனான காலநிலை நிலவிவருவதால் உடல் உஷ்ணத்தைத் தடுக்கும் பொருட்டு வெள்ளரிப்பழத்தைக் கொள்வனவு செய்வதில் மக்கள் அதிக நாட்டம் செலுத்துவதைக் காண முடிகிறது. (ப-66)


# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 12 . 1953



இறப்பு 05 . 05 . 2024

## கந்தசாமி பாலசுப்பிரமணியம்

தோப்பு வீதி மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு கந்தசாமி பாலசுப்பிரமணியம் அவர்கள் 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-சின்னாச்சி தம்பதியினரின் கனிஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, நடேசப்பிள்ளை, கிருஸ்ணப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவபாக்கியத்தின் (கிளி) அன்புக் கணவரும் மற்றும் விநாயகமூர்த்தி, சிவக்கொழுந்து புவனேஸ்வரி, புஸ்பவதி, இராசையா மற்றும் காலஞ்சென்றவர்களான பரமசாமி, கெங்காதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு நண்பகல் 12.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42385) V-1



'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

# மரண அறிவித்தல்

மலர்வு 15 . 10 . 1948



உதிர்வு 05 . 05 . 2024

## பாலசுப்பிரமணியம் கண்மணி

யாழ்ப்பாணம் கொல் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் மாதனை பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கண்மணி அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - நீலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமசாமி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், கிரிசாந்தி, யவஹர்லால்நேரு அவர்களின் அன்புத் தாயாரும், கங்காதரன், கார்த்திகா (யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜதீசனின் அன்புப் பேர்த்தியும், அமரர் ஜெகதாம்பாள், நடராசா, மகேஸ்வரன் மற்றும் சந்தானலக்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாலப்பை வீதி, மாதனை,
பருத்தித்துறை.
077 9238 971
077 6927 307

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 410) A-1



# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1936



மறைவு 07 . 05 . 2024

## அமரர் கந்தையா விசாலாட்சி

சிங்கப்பூரை பிறப்பிடமாகவும், கைதடி தென்கிழக்கு செட்டியார் வளவினை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா விசாலாட்சி அவர்கள் நேற்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை பி.ப 6.00 மணியளவில் காலமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் (செட்டியார்), மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினகுமாரி சண்முகலிங்கம், பத்மாவதி, கனகலிங்கம், யோகலிங்கம், சிவபாக்கியம், இராசலட்சுமி, காலஞ்சென்ற சுப்புலட்சுமி மற்றும் பரமேஸ்வரி மகாலிங்கம், காலஞ்சென்ற .ராசகுமாரி மற்றும் மங்கையக்கரசி, இராஜேஸ்வரி, வைகுந்தமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கிருஸ்ணர் மற்றும் சாந்தி, வடிவேலு, வசந்தி, விஜயகுமாரி காலஞ்சென்ற சுப்பிரமணியம் கந்தையா, சின்னையா, திருச்செல்வம் மற்றும் லீலாவதி, ஜெயரத்தினம், காலஞ்சென்ற நற்குணதேவன் மற்றும் வேலாயுதம், காலஞ்சென்ற சண்முகக்குமார் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தென்கிழக்கு
(செட்டியார் வளவு)
கைதடி

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 441) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்துக்
கொண்டே
இரு
முளைத்தால் மரம்
இல்லையேல்
உரம்

– சே குவேரா

# புதன் பொய்கை

08.05.2024
புதன்கிழமை



**இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக இல்லாத வகையில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பநிலை, வறட்சியால் மக்கள் பல்வேறு நோய்களுக்கும், சிரமங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.**

■ பிரதிகா

# அனில் மேல்!

வெயிலோடு விளையாடி வெயிலோடு உறவாடி வெயிலோடு மல்லுக் கட்டி ஆட்டம் போட்டோமே' என்ற நா.முத்துக்குமாரின் பாடல்வரிகள் எம் நீங்கா நினைவுகளை ஒருகணம் மீட்டிப்பார்த்து விட்டுப் போகும். வெயிலானாலும் அது அழகிய வசந்தகாலமே. ஆனால் இன்று வெளியில் தலைகாட்ட முடியாதபடி எட்டிப் பார்த்தாலே எரித்து விடுவது என்று உக்கிரமான காளிபோல் காட்சியளிக்கின்றான் கதிரவன். இன்றைய மாறுபட்ட காலநிலை காரணமாக புவியின் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுகிறது. வெப்பம் என்பது ஒரு பொருளின் வெப்பநிலையை உயரச்செய்து, மூலக்கூறுகளை வேகமாக இயங்க வைக்கக்கூடிய ஒரு வகையான ஆற்றலாகும். இயற்கையான வளிமண்டலச் செயற்பாடுகள், செயற்கையான மனிதச்செயற்பாடுகள் போன்றவற்றால் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படக்கூடும். இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக இல்லாத வகையில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பநிலை, வறட்சியால் மக்கள் பல்வேறு நோய்களுக்கும், சிரமங்களுக்கும் ஆளாகியுள்ளனர். எல்நினோவின் விளைவுகள் மனித குலத்தின் பாதிப்புகளை மேலும் மோசமாக்கிவிட்டிருக்கின்றன.

## நகரமயமாக்கலின் விளைவு

அண்மைக்காலமாக இடம்பெற்ற நகரமயமாக்கலின் விளைவாக அதிகரித்த பிராந்திய வெப்பநிலையால் பச்சைவீட்டு விளைவு ஏற்பட்டு புவிமேற்பரப்பு அதிகளவில் வெப்பமடைந்து வருகின்றது. தற்போது இலங்கையில் 40.1 பாகை செல்சியஸ் தொடக்கம் 40.3 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகின்றது. வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் நிலவும் வரட்சி காரணமாக அங்குள்ள நீர்த்தேக்கங்கள் வற்றிவருவதோடு, பயிர்ச்செய்கை நடவடிக்கைகளும் பாதிப்படைந்து வருகின்றன. இதனால் விவசாய விளைபொருள்களின் உற்பத்தி குறைவடைந்து, நாட்டின் பொருளாதாரம் தீவிரமாகப் பாதிப்படைந்து வருகின்றது. வறுமையும் தலைவிரித்தாடுகின்றது.


பல்வேறு மனிதச்செயற்பாடுகளும் புவிவெப்பமடைதலில் பெரும் பங்காற்றுகின்றன. காடழிப்பு, அதிகளவான வாகனப்பயன்பாடு, மின்பொருள்களின் பாவனை, இரசாயன உரங்களின் பாவனை, அதிகளவான எரிபொருள் மற்றும் மின்சக்திப் பயன்பாடு போன்ற காரணங்களால் மிதமிஞ்சிய காபனீரொட்சைட், மீதென், சி.எப்.சி. போன்ற வாயுக்கள் வெளியேறி பச்சைவீட்டு விளைவு ஏற்பட வழிசெய்கின்றன. இதனால் புவி மேற்பரப்பில் வெப்பநிலை அதிகரிக்கின்றது. வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக வழமையைவிடக் கூடுதலான நீர், உடம்பிலிருந்து வெளியேறுவதால் மக்கள் பல தோல்நோய்ப் பிரச்சினைகளுக்கும், வாய், கண் சம்பந்தப்பட்ட உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர். அத்தோடு குடிநீருக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

'நாஸாவின் கருத்துப்படி பனிப்பிரதேசங்களில் பனிமலைகளும், பனிப்பாறைகளும் தற்போது வேகமாக உருகி வருகின்றன. 40 சதவீதமான பனிப்பாறைகள் குறைந்துள்ளன. கடல் நீர் மட்டம் அதிகரித்துள்ளமையால் சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடும். மேலும் வளிமண்டலத்தில் விடப்பட்ட கரியமிலவாயுவில் 50 சதவீதம் கடல்நீரில் கரைந்து நீரின் அமிலத்தன்மை அதிகரித்தமையால் கடல் உயிரிகள் அழிந்த வண்ணம் உள்ளன. இது கடல்சார் உற்பத்திகளைப் பாதிப்படையச் செய்யும்.

## வெப்பநிலைப் பாதிப்புகளை எவ்வாறு குறைக்கலாம்?

சூரியனின் வெப்பத்தை எம்மால் கட்டுப்படுத்த முடியாதுவிடினும், அந்த வெப்பத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளமுடியும். முடிந்தவரை காடுகளை அழிப்பதைக் குறைக்கவேண்டும், மின்சக்திக்குப்பதிலாக சூரியசக்தி, காற்றுச்சக்தி, நீர்ச்சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தல், எரி வாயுவுக்குப் பதிலாக மரக்கறிக்கழிவுகள், சாணம் போன்றவற்றிலிருந்து பெறக்கூடிய உயிர்வாயுவைப் பயன்படுத்தல், பெற்றோலியத்துக்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்தல், குளிர்சாதனப் பெட்டிகளின் பயன்பாட்டைக் குறைத்தல் போன்றவற்றை செயற்படுத்துவதன் மூலம் பச்சைவீட்டு வாயுக்கள் வெளியேறி, புவி வெப்பமடைவதைக் குறைக்கமுடியும். நன்னீர்நிலைகளிலுள்ள நீரை மீள்சுத்திகரிப்புச் செய்து குடிநீராகப் பயன்படுத்துவதன் மூலம் குடிநீர்ப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியும்.

திறந்த வெளியில் கடினமான வேலைகள் மற்றும் உடற்பயிற்சி செய்தல் போன்றவற்றைத் தவிர்த்தல், அடிக்கடி நீர் அல்லது நீராகாரங்களைப் பருகுதல், நாளொன்றுக்கு இருமுறையேனும் நீராடுதல், வெண்மையான ஆடை அணிதல் போன்றவற்றால் அதிக வெப்பநிலையிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதிகளவான மரக்கன்றுகளை நடுவது வருங்காலத்திலாவது, கொதிக்கும் பூமியின் சூட்டைத் தணிப்பதற்கான நீரூற்றாக அமையும். 'வெயில் வெளிவிடும் வெப்பம், வெளுத்துப் போகிறது கார்மேகம், நீர்த்தேக்கம் வரண்டே வெம்மையுடன், வறுமை இங்கோ செழிப்புடன்' எனும் கதிரேசனின் கவிதை இக்காலத்தின் உண்மை நிலையை உணர்த்துகிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுத் திரையில்

# பேராசிரியர் துணைவேந்தர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்





■ பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

இன்று பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் பிறந்தநாள். இவர் சுப்பிரமணியம் முத்தம்மா தம்பதியினருக்கு 1924ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி பிறந்தவர். அவர் இருந்திருந்தால் இன்று நூறாவது அகவையைச் சிறப்பாகக் கொண்டாடியிருப்பார்கள். அவர் இல்லாத நிலையிலும் அவரது நூறாவது அகவை நாள் கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்'

என்பது குறள். இந்தத் திருக்குறளுக்கு இலக்கணமாய் உங்கள் பிள்ளைகள் உலகளாவிய ரீதியிலே பேருடனும், புகழுடனும் சிறப்புடனும் வாழ்கிறார்கள்.

*'நேற்றுப் போல இருந்குதென் நெஞ்சிலே*
*நீங்கள் செய்த நல்அறம் யாவுமே*
*தோற்றுப் போகவில்லை உன் நல்லறம்*
*தொண்டு செய்தவர் வீழ்வதும் இல்லையே'*

உங்களைப் பற்றி எண்ணும் போதெல்லாம் இந்தக் கவிதைவரி என்நினைவுத் திரையில் நிழலாடும். பேராசிரியர் சு.வித்தியானந்தன் பிறந்த நூறாவது ஆண்டிலே எனது நெஞ்சத் திரையில் நிழற்படமாகப் பதிந்திருக்கும் காட்சிகள் சிலவற்றை மீட்டுப் பார்க்கிறேன். யாழ்ப்பாண வளாகத் தலைவராக நீங்கள் வந்த காலத்தில் இருந்து உங்களின் இறுதிக் காலம் வரை, உங்களோடு நெருங்கிப் பழகிப் பயணித்தவன் நான். வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டபோது அதன் துணைவேந்தராக நீங்களே நியமிக்கப்பட்டீர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் என்ற பெருமை உங்களுக்கே உரியது. ஐம்பதாவது அகவையிலே பல்கலைக்கழகம் கால்பதித்திருக்கின்ற வேளையிலே முதலாவது துணைவேந்தரின் நூறாவது அகவையும் கால்பதிக்கின்றமை தெய்வீக நியதியே. உங்களை நீளநினைந்திருப்போம். பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாகப் பலமான அத்திபாரத்திலே இயங்கியவேளையிலே அதன் துணைவேந்தராக நீங்கள் நியமிக்கப்பட்டபின், வளாகம் பல்கலைக்கழகமாக நிமிர அயராது உழைத்தீர்கள். உள்ளும் புறமும் பல்கலைக்கழகமாக உயர வேண்டும் என்பதற்காக அர்ப்பணிப்போடு பணியாற்றி வெற்றியும் கண்டீர்கள்.

பல்கலைக்கழகத்தின் பிரதான பணி என்ன? என்பதை நீங்கள் முழுமையாக அறிந்திருந்தீர்கள் உலகப்புகழ் பெற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலருடன் நல்லுறவு இருந்தது. குறிப்பாகத் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்களுடன் நெருக்கமான உறவு பூண்டிருந்தீர்கள். கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி, புதிய துறைகள், புதிய பீடங்கள் திறமை வாய்ந்த வளவாளர்கள், சமூக உறவு என உங்கள் கவனம் பரந்து விரிந்து சென்றது. பௌதிக வளத்தையும் பெருக்கிக் கொண்டீர்கள். பல்கலைக்கழகப் பணியே உங்கள் உயிர் மூச்சாக இருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கற்றதும், கற்பித்ததும் காரணமாக உங்கள் நட்புவட்டம் மிகப்பெரிதாக இருந்தது. நண்பர்களில் பலர் உயர் பதவிகளை வகித்தார்கள். அவர்களினூடு உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திப் பல்கலைக்கழகத்துக்காக உதவிகள் பலவற்றைப் பெற்றீர்கள். உயர் நிர்வாகப் பதவியில் இருந்த சிங்கள அதிகாரிகள்கூட உங்களைச் 'சேர்' என அழைத்துத் தன்னடக்கத்துடன் உரையாடுவதை நான் கண்டிருக்கிறேன். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்படப் பல பேராசிரியர்களை நீங்கள் பெயர் கூறி அழைப்பதைக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

**போர்ச் சூழலிலும்**
**அற்புதப் பணி!**

யுத்தச் சூழல் எல்லா வகையிலும் இயல்பு வாழ்வைச் சீரழித்தது. போர்ச்சூழல், பொருளாதாரத் தடை, இந்திய அமைதிப் படை வருகை, குண்டு வீச்சுகள், ஷெல் அடி, போக்குவரத்துத் தடை, பல்வேறு ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையிலே பல்கலைக்கழகத்தை மூடவிடாது காப்பாற்றிய பெருமைக்குரிய துணைவேந்தர் நீங்கள். தெல்லிப்பழை வீமன்காமத்திலிருந்து பொதுப்போக்குவரத்திலே பயணம் செய்து பல்கலைக்கழகத்தைப் பாதுகாத்து இயங்கவைத்த துணைவேந்தர் நீங்கள். முச்சக்கர வண்டியில் பணிக்கு வந்த ஒரேஒரு துணைவேந்தர் நீங்கள். இத்தகைய யுத்தச் சூழலிலே பலர்

*'அற்றகுளத்தில் அறுநீர்ப் பறவைபோல்*
*உற்றுழித் தீர்வார் உறவல்லர் அக்குளத்தில்*
*கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே*
*ஒட்டி உறுவார் உறவு'*

எடுக்கக்கூடிய லீவுகளையெல்லாம் எடுத்துக் கொண்டு பல்கலைக்கழகத்தை விட்டுப் போனவர்களைப் பற்றிக் கவலைப்படாது தனித்து நின்று அஞ்சாமற் பணியாற்றியவர்கள் நீங்கள். எத்தகைய சோதனைகள் வந்தாலும் அஞ்சாது எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றலுள்ள துணைவேந்தராக நீங்கள் பணியாற்றினீர்கள். உங்களின் அபார துணிச்சலுக்கு நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு இன்றும் சாட்சியமாக இருக்கின்றது. நீங்கள் அரிதின் முயன்று பல்கலைக்கழகத்துக்குப் புதிய துறைகளைக் கொண்டு வந்தீர்கள். பொருத்தமான வளவாளர்கள் இல்லையென்று மறுதலித்தவர்களை நோக்கி 'நீங்கள் படித்துப் படிப்பியுங்கள்பின்னர் அவை சிறப்பாக வரும் என்று நீங்கள் கூறியதைக் கேட்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அந்தத் துறைகள் இன்று பேராசிரியர்கள் பலரை உருவாக்கி உயர்ந்து நிற்கின்றன.

உங்களின் ஆற்றலை, ஆளுமையை, தூரநோக்கை, நிர்வாகத்திறனை, மனிதாபிமானத்தை, ஆய்வுப் புலமையை உங்களின் அருகில் இருந்து கண்டு அனுபவித்தவன் நான். உங்களின் நெறிப்படுத்தலிலேதான் நான் முதுதத்துவமாணிப் பட்டத்துக்கான ஆய்வினைச் செய்தேன். பலத்த வேலைப்பழுவுக்கு மத்தியிலும் ஒவ்வொரு வசனமாக வாசித்துத் திருத்தித் தந்தீர்கள். சனி அல்லது ஞாயிறு நாள்களிலே எனது துவிச்சக்கர வண்டி வீமன்காமம் தமிழகத்திலே மாமர நிழலில் நிற்கும் அந்தக் காலத்தில் துவிச்சக்கரவண்டியே எமது போக்குவரத்துக்குப் பிரதான சாதனம் ஆகும். திருநெல்வேலியிலிருந்து வீமன்காமத்திற்குத் துவிச்சக்கர வண்டியிலே பயணித்த தலைமுறையினர் நாங்கள்.

அன்போடு அழைத்து அரவணைத்து உபசரித்து 'ஓய்' என்னும் காணும் இப்படி எழுதியிருக்கிறாய் என்று ஒரு சிறு புன்னகையோடு கூறுவீர்கள். அந்த உரையாடலும் புன்னகையும் இன்றும் என் ஆழ்மனத்தில் ஆலம் விழுதாய் வேரோடி நிற்கின்றன. ஆய்வாளர் மீது தனது கருத்து நிலையைத் திணிக்கும் பழக்கம் உங்களிடம் இருந்ததில்லை. நீர் சொல்லும் விடயத்துக்குத் தகுந்த ஆதாரம் இருந்தால் அதைச் சுட்டிக்காட்டி எழுதலாம் என்று எனக்குப் பல தடவை கூறியிருக்கிறீர்கள். இந்தப் பண்பினாலேதான் உங்களது கருத்து நிலைக்கு ஒத்துப்போகாத அல்லது முரண்பாடு உடைய பலர் [illegible] ஆய்வாளர்களாக மேற்கிளம்ப முடிந்தது என்று எண்ணுகிறேன். சிலவேளைகளில் உங்களுக்குக் கோபம் வரும். ஆனால் அந்தக் கோபம் வந்த வேகத்திலேயே அடங்கிவிடும். அவரின் கோபக் குணத்தை எண்ணும்போது என் நினைவுத் திரையில் நிழலாடும் நீதிப் பாடல் இது:

*'கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்*
*போற்பிளவோ டொப்பாரும் போல்வரே - விற்பிடித்து*
*நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே*
*சீர்ஒழுகு சான்றோர் சினம்'*

இந்த நீதிப் பாடலுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்தான் பேராசிரியர், துணைவேந்தர் சு.வித்தியானந்தன் என்பதை அவரோடு பழகியவர்கள் அனைவரும் அறிந்திருப்பர். சிறப்பு மிகுந்த சான்றோனின் சினம் வந்த வேகத்திலேயே போய் விடும். 'நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே' என்ற உவமை உங்கள் சினத்துக்கு மிகப் பொருத்தமானது என நான் எண்ணுவதுண்டு. அப்படியானவர்களை இன்று காண்பது அரிது.

சாதி, மத, பிரதேச வேறுபாடுகளை அணுவளவும் கைக்கொள்ளாத ஆளுமை உங்களுக்குச் சொந்தமானது. நடைமுறையிலும் ஆய்வுநெறியிலும் ஒரு பொதுமை நிலையைக் கடைப்பிடித்தீர்கள். இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் என உங்கள் ஆய்வு நூல்கள் வெளிவந்தமையை அனைவரும் அறிவர். பழந்தமிழ் இலக்கியத்திலே நீங்கள் செய்த ஆய்வுகள் இன்றுவரை நின்று நிலைக்கின்றன. தமிழகத்து ஆய்வாளர்கள் இன்றும் உங்கள் நூல்களை மேற்கோள் காட்டிக் கொண்டிருக்கின்றனர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பேரவையிலே (சின்டிகேட்) அங்கத்துவம் வகித்த ஒரே ஓர் இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமை உங்களுக்கே உரியது.

சிறந்த ஆய்வாளனாக, ஆய்வு வழிகாட்டியாக, பதிப்பாசிரியராக அற்புதமான போதனாசிரியராக, துணிச்சல் மிக்க நிர்வாகியாக, கலையன்பனாக, நாட்டுப் பாடல் தொகுப்பாளனாக, கூத்துக் கலை மீட்பனாக, குருபக்தி மிக்க சிஷ்ஷயனாக, சமூக உறவைப் பேணியவராக, மாணாக்கரை நேசிப்பவராக அவர்களின் உயர்வு கண்டு மகிழ்பவராக எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறியன சிந்தியாத மானுடமாக வாழ்ந்தவர்கள் நீங்கள். உங்களால் நீங்கள் இருந்த கதிரை பெருமை பெற்றது. நீங்கள் கற்பிப்பதில் ஆற்றலும் ஆர்வமும் ஆசையும் உடையவர் என்பதைத் துணைவேந்தர் காரியாலயத்திலே வைத்துத் தமிழ்ச் சிறப்பு மாணவர்களுக்குக் கற்பித்தமை புலப்படுத்தும் உங்களிடம் கற்றவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் நின்று நிலைப்பார்கள். தவறு செய்தால் கண்டிப்பார். தண்டிக்கமாட்டார். 'கடிதோச்சி மெல்லஎறியும் உங்கள் செய்கைகளைப் பல தடவை கண்டிருக்கின்றேன். உங்களைப் பற்றி நிறையவே எழுதலாம். பலர் எழுதியுள்ளனர். இன்னும் எழுதவுள்ளனர். 'மானுடத்தை நேசிக்கும் மாமனிதன் வித்தி' எனப் பண்டிதர் க.வீரகத்தி உங்களைப் பற்றி எழுதிய பாடலடியின் இறுதிவரி இது.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வித்தியானந்தனைப் பற்றி எழுதிய பாடல்களில் ஒன்றைப் பதிவு செய்து எனது நினைவுத் திரையை மூடிக்கொள்கிறேன்.

*'நாடகத் துறைகள் கூத்து*
*நாட்டுள பாட்டுத் தாளம்*
*ஏடகத் துறங்கி ஏங்கி*
*இறுதி மூச்செறியும் போது*
*பாடுபட்டனைத்துப் பேணிப்*
*பாயல் விட்டெழுப்பிப் பாழ்நோய்*
*வீடு செய்திட்ட டாக்டர்*
*வித்தியானந்தன் வாழ்க'*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவர் மேரி ஸ்ரீகாந்தி ஹன்டி அள்ளி வழங்கிய அன்பு வாழ்வின் சொந்தக்காரர்



Dr. Mary Srikanthi Handy

(மருத்துவத் துறையிலும், கல்வியும், சமூகச் செயற்பாடுகளிலும், நலிந்தோரின் வாழ்வை நலமாக்குவதிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பணியாளராகத் திகழ்ந்த மருத்துவர் திருமதி மேரி ஸ்ரீகாந்தி ஹன்டியின் நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது)

த.கிரிஷாந்தன்
இயக்குநர், ஈகிள் கெயர் ட்ரஸ்ட்

தன்னலமற்ற சேவையின் வரலாற்றில் திருமதி மேரி ஸ்ரீகாந்தி ஹன்டியின் பெயர் என்றும் நின்று நிலவும். அவர் தமது பரோபகாரத்தினால் என்றுமே அழிக்கமுடியாத பெயரை உலகிலே விட்டுச்சென்றுள்ளார். மக்களின் ஈடேற்றத்துக்காக அவர் தம்மை முற்றுமுழுதாக ஒப்புக்கொடுத்தவர். இவர் 1935ஆம் ஆண்டு மருத்துவர் ஜோர்ஜ் ராஜநாயகம் ஹன்டி திருமதி கண்மணி ஹன்டி ஆகியோரின் செல்வப் புதல்வியாகப் பிறந்தார்.

இளமைப்பருவத்திலிருந்தே மற்றையவர்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பேரார்வத்தை வெளிப்படுத்தினார். அவருடைய இளமைப்பருவத்தில் மிகச்சிறந்த நலன்புரித்திட்டங்களுக்கு பணம் சேகரிக்கும் முயற்சியில் அயராது பாடுபட்டார். அவருடைய அர்ப்பணிப்பு வை.டபிள்யு.சி.ஏ என்ற ஸ்தாபனத்தில் அதிகமாக காணப்பட்டது. வை.டபிள்யு.சி.ஏ இலாபத்தை நோக்காது பெண்களுக்கு வலுவூட்டுவதனை இலட்சியமாகக் கொண்டிருந்தது. அவருடைய கல்விப்பயணம் இலங்கையிலே கொழும்பில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகியது. இந்தக் கல்லூரியிலே தனது சிந்தனாசக்தியை கூர்மைப்படுத்திக் கொண்டார். அவருடைய தணியாத கல்வியார்வம் அவரை இங்கிலாந்திற்குச் செல்லும்படி செய்தது. அங்கே விஞ்ஞானத்தில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். மேரி ஸ்ரீகாந்தி ஹன்டி தனது அயராத முயற்சியின் விளைவாக இங்கிலாந்திலுள்ள சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

### 1990களில் திருப்புமுனை

1990ஆம் ஆண்டில் மருத்துவர் மேரி ஸ்ரீகாந்தி ஹன்டி தமது வாழ்விலே ஒரு முக்கியமான நிகழ்வினை சந்திக்க வேண்டியதாயிற்று. அவருடைய தந்தையும் பிரசித்தி பெற்ற இருதயநோய் நிபுணரும் இலங்கையின் இருதய சங்கத்தின் தலைவருமாக விளங்கிய மருத்துவர் ஜோர்ச் இராசநாயகம் ஹன்டி நோய்வாய்ப்பட்டு 1995ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தமது தந்தையாரின் கீர்த்தியே அவரை கௌரவிக்கும் வண்ணம் மருத்துவர் ஜி.ஆர்.ஹன்டி நிறுவனத்தை தோற்றுவிப்பதற்கு உந்துதல் அளித்தது. இந்த நிறுவனம் இலங்கையின் சுகாதார வலைப்பின்னலுக்கு அளப்பெரிய சேவையாற்றியுள்ளது. இந்த நிறுவனம் முன்னெடுத்த செயற்பாடுகளில் ஒன்று கொழும்பிலுள்ள அரச மருத்துவமனைக்கு ஒரு இருதய நோய் பராமரிப்புப் பிரிவினை அளித்தமையாகும். இதில் மருத்துவர் ஹன்டியின் தனிப்பட்ட ஆர்வம் மறுக்கவோ மறைக்கவோ முடியாததொன்றாகும்.

இதுமட்டுமன்றி யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவர் ஜி.ஆர்.ஹன்டி ஞாபகார்த்த இருதய நோய் சிகிச்சைப் பிரிவை உருவாக்கினார். வடமாகாணத்தில் இருதய நோய் பாதுகாப்புக்கு முக்கியமான பங்களிப்பினை செய்தார். பிள்ளைகள் மீது கொண்டிருந்த கரிசனை, பிள்ளைகளின் இருதய நோய் திட்டம் என்பவற்றுக்கு ஆதரவளித்தமை, மருத்துவர் ஜி.ஆர்.ஹன்டி ஞாபகார்த்த நிதியத்தை உருவாக்கவும் வழிவகுத்தது. அவருடைய அயராத முயற்சியினால், நோயாளிகள் சிகிச்சைக்காக காத்திருக்கும் காலம் குறைந்தது. அந்தக் குடும்பங்களினுடைய பாரமும் குறைந்தது. இதய நோய் நிபுணராகிய மருத்துவர் வை.லஹி என்பவருடன் இணைந்து ஆற்றிய சேவையினால் நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளிற்கு உயிர்காக்கும் சத்திர சிகிச்சை வழங்கப்பட்டது.

பிள்ளைகளின் சுகாதாரத்தில் தான்கொண்டிருந்த அக்கறையால், குழந்தை நோய்ப்பிரிவு என்ற ஓர் பிரிவினை, இருதய நோய் நிறுவனத்தை அமைப்பதில் முனைப்புக் காட்டினார். இலங்கை திருச்சபையின் ஆணைக்குழுவினரோடு சேர்ந்து ஹன்டி ஞாபகார்த்த மருத்துவக்கல்விக்கான புலமைப்பரிசில் திட்டத்தினையும் ஏற்படுத்தினார். மருத்துவத்துறை மாணவர்கள் தமது கல்விக்காகப் பாடுபடும் சூழலில் இந்தப் புலமைப்பரிசில் ஒரு வரப்பிரசாதமாக இருந்தது.

### சுகாதாரசேவைக்கு அப்பால்

சுகாதார சேவைக்கும் கல்விப்பணிக்கும் அப்பாலும் கூட திருமதி மேரி ஸ்ரீகாந்தி ஹன்டி அவர்களுடைய சேவை வியாபித்திருந்தது. நிதி திரட்டும் முயற்சிகளில் தமது சொந்த நன்கொடையை வழங்கி வந்தார். அதனால் மருத்துவர் ஜி.ஆர்.ஹன்டி ஞாபகார்த்த நிதியத்தினுடைய பலத்தைப் பெருக்கியதோடு மட்டுமன்றி பலருடைய வாழ்க்கையையும் சீர்ப்படுத்த ஆவன செய்தார். குடும்பத்தாரின் பாரம்பரியத்தின் வழியில் டாக்டர் ஹன்டி பரியோவான் கல்லூரிக்கும் தமது சேவைகளை வாரி வழங்கினார். தமது தந்தையாரின் பெயரைத் தாங்கி நிற்கும் கல்லூரி நூல்நிலையத்தை அண்டி அவர் ஸ்ரேட் ஒப் த ஆர்ட் கணினி ஆய்வுகூடம், பிரதான நூலகம், இணையத்தள அவதானிப்பு நிலையம் என்பவற்றோடு ஆற்றல் மிகுந்த ஏழை மாணவர்களுக்குப் புலமைப்பரிசில், சிரேஷ்ட பாடசாலையின் கணினி ஆய்வுகூடம், விவசாய விருத்தித் திட்டம், தண்ணீரூற்று போன்ற இடங்களில் ஆங்கில அறிவுவளர்ச்சிக்கான பாடத்திட்டம் என்பனவற்றையும் உருவாக்கினார்.

ஈகிள் கெயர் நம்பிக்கை நிதியம் என்ற அறப்பணிக்கு மூவும் மருத்துவர் ஜி.ஆர்.ஹன்டியின் மகோன்னத கொடையினாலேயே இலங்கையில் உருவாக்கப்பட்டது. ஈகிள் கெயர் நிதியம் என்றஸ்தாபனம் இருதய நோய், சிறுநீரகநோய், புற்றுநோய், கட்புல செவிப்புலக் குறைபாடு, மனநோய் மற்றும் விசேட தேவை என்பவற்றால் அவதியுறும் சிறுவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுத்தது.

### வாழ்வின் பிரியாவிடை

2023ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மேரி ஸ்ரீகாந்தி ஹன்டி நம்மிடமிருந்து அமைதியாகப் பிரிந்துவிட்டார். பரோபகாரம், தாராள மனப்பாங்கு நிறைந்த வாழ்வு அமைதியாக முடிவுக்கு வந்தது. முதுமையில் அவருடைய உடல் நலம் குன்றியிருந்தபோதும்கூட பிறருக்கு உதவி வழங்குவதை ஒருபோதும் விட்டுவிடவில்லை. தேவையுடைய இளம் சிறார்களின் கல்விவளர்ச்சிக்காகவும், பெரும்பாலான சிறுவர்களின் கல்வியில் நோயென்ற தடைக்கு அப்பால் அவர்களை அழைத்துச் சென்று அவர்களுடைய கல்விக்கு என்றும் என்றும் ஒளியூட்டிக் கொண்டிருக்கின்ற உன்னதமான செயற்பாட்டிற்கு அவர் வழங்கிய ஈடுபாடு காலத்தில் நின்று நிலைக்கும்.

ஈகிள் கெயர் நிதியம் மூலமாகவும் ஏனைய அறக்கொடைகள் மூலமாகவும் அவர் அயராது பாடுபட்டு பெண்கள், மாணவர்கள், பிள்ளைகள் மற்றும் மாற்றுவலுவுடையோர் ஆகியோரின் கல்வி, மருத்துவம் என்பனவற்றில் அவர்களிற்குரிய உரிமையை வலியுறுத்தினார். அவருடைய நினைவாக ஸ்தாபிக்கப்பட்ட ஈகிள் கெயர் நிதியமானது, தேவையுள்ள மக்கள் அனைவரையும் அன்பினாலும், அரவணைப்பினாலும் சீர்திருத்தப் பாடுபடுவதில் கலங்கரை விளக்காகத் திகழுமென்பதிலும் ஐயமில்லை.



## பொழுது புலரும்...

பாதம் தொட்டு தூரம்போன
கடலலைகளும்...
மேற்கு வானில் மறைகின்ற
சூரியனும்...
ஏதும் சொல்வதாய்த்
தெரியவில்லை

கால்களைப் பற்றி மின்னிய
மணல்களை உதறியபடி
நடந்துகொண்டிருக்கிறேன்...

நாளையும் இக்கரையில்
என்பொழுதுகள்
நிச்சயம் புலரும்...


தொட்டுச் செல்லும்
அலைகளுக்காக
அல்ல...
பற்றிக்கொள்ளும்
மணல்களுக்காகவேனும்...



பபிதினி இராமச்சந்திரன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேயொரு வாக்குக்காக காட்டில் வாக்குச்சாவடி; இந்தியத் தேர்தலில் இவ்வாறானதொரு சம்பவம்!



புதுடில்லி, மே 8 இந்திய மக்களவைத் தேர்தலில் ஒரேயொரு வாக்காளருக்காக காட்டினுள் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட வாக்காளர் வாக்களிப்பதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளது இந்திய தேர்தல் ஆணையம்.

குஜராத் மாநிலத்திலுள்ள கீர் காடு உலகின் புகழ்பெற்ற காடுகளில் ஒன்று. இங்கு 700 சிங்கங்கள் வசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் திறந்த வாகனங்களில் சபாரி சுற்றுலா மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளையும் ஆங்காங்கே குறுக்கே பாயும் சிறுத்தைகளையும், நரிகளையும், கழுதைப்புலிகளையும் தவிர மனித நடமாட்டத்தைக் காணமுடியாது.

ஒரேயொரு வாக்குக்காக (சாமியார் ஒருவருக்காக) தேர்தல் அதிகாரிகள் இரண்டு நாள்களைக் கீர் காட்டினுள் செலவிட்டுள்ளனர். காலை 7 மணிக்கே வாக்குச்சாவடி திறக்கப்பட வேண்டுமென்பதும் மாலை 4 மணி வரை திறந்திருக்க வேண்டுமென்பதும் தேர்தல் விதி. இந்த ஒரேயொரு வாக்குக்காக முதல் நாளே புறப்பட்டு 40 பாகை செல்ஸியஸ் வெப்பநிலையில் மூன்றரை மணித்தியாலப் பயணத்தின் பின் வன இலாகா அலுவலகத்தை அடைந்து அங்கு வாக்குச்சாவடியை ஏற்பாடு செய்துள்ளனர் அதிகாரிகள். அத்துடன் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஆறு அதிகாரிகளும் இரண்டு பொலிஸாரும் கடமையிலிருக்க வேண்டுமென்பதும் தேர்தல் சட்டம். வன இலாகா அலுவலகத்தில் தளபாடங்கள் எதுவுமில்லாத காரணத்தால் அனைவரும் நிலத்திலேயே உறங்கியுள்ளனர். அத்துடன் பாணும் பருப்புமே அனைவரினதும் உணவாகவும் அமைந்துள்ளது. கைபேசி பயன்படுத்த முடியாது.

இந்தக்காட்டினுள் பறவைகளின் ஒலிகளின் மத்தியில் வாக்களித்தது மகிழ்ச்சி தருகிறது. எனக்காக, தனி ஒருவருக்காக இந்திய அரசாங்கம் வாக்குச்சாவடி அமைத்து எனது வாக்குரிமையை (ஜனநாயகத்தை) நிலை நாட்டியமை எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது என வாக்களித்த சாமியார் கூறியுள்ளார். இவ்வாறாக காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை தங்கி நின்று ஒரேயொரு வாக்காளரின் வாக்கை பதிவு செய்துள்ளனர் தேர்தல் அதிகாரிகள்.

இதேவேளை - ஜூன் முதலாம் திகதி இமாசலப்பிரதேசத்தில் உலகிலேயே உயரமான (4 ஆயிரத்து 650 மீற்றர் உயரத்தில்) வாக்குச்சாவடி அமைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-6)

# INVITATION FOR BID 2024/03
## Regional Directorate of Health Service, Jaffna.

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from World Bank towards the cost of Primary Health Care System Strengthening Project (PSSP)-2024 and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.

02. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.

Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

03. "Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

05. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.

06. Interested bidders may obtain further information from address given below in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax: 0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.

08. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

09. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.

10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | From 08.05.2024 until 21.05.2024 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 15.05.2024 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 22.05.2024 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2024/PSSP/W/19 | Improvement Work at SMO Office Gurunagar,Jaffna- | 3.10 | 89Days | C8 and C7 (Buildings) | 3,500.00 | 31,000.00 | Till 21.08.2024 |
| NP/04/41/2024/PSSP/W/20 | Construction of Generator Room at BH Chavakachcheri | 4.25 | 99Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 42,500.00 | Till 21.08.2024 |
| NP/04/41/2024/PSSP/W/21 | Improvement Work at PMCU Mulliyan Jaffna-OPD Block,Ambulance Garage and MO Quarters | 1.49 | 74Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 07.08.2024 |
| NP/04/41/2024/PSSP/W/22 | Repair and Renovation of Wash room at Male ward BH Kayts,Jaffna. | 1.42 | 74Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 14,500.00 | Till 07.08.2024 |
| NP/04/41/2024/PSSP/W/23 | Renovation of OPD and Wash Room of Ward at DH Vaddukoddai | 1.07 | 71Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 11,000.00 | Till 07.08.2024 |
| NP/04/41/2024/PSSP/W/18 | Renovation of Kitchen and OPD at DH Pandaththarippu | 1.69 | 76Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 07.08.2024 |
| NP/04/41/2024/BM/W/01 | Renovation of Doctors Quarters at DH Analaitivu | 1.39 | 74Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 14,000.00 | Till 07.08.2024 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service, Jaffna.**

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சசிந்தா பிரபாகரன்**
அவர்களின் அன்பு மாமனார்
**சரவணமுத்து தர்மலிங்கம்**
அவர்கள் 06.05.2024 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 09.07.1943 இறப்பு 06.05.2024

**அதிபர், ஆசிரியர்கள்**
**யா/ கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம்**
**சாவகச்சேரி**


# நாகபூஷணி திருமண சேவை

**50% கட்டணக் கழிவு**
(05.05.2024 முதல் 15.05.2024 வரை)


பல்லாயிரக் கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து நீங்கள் விரும்பும் மணமக்களை மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

**10/2, பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
**(யாழ். வேம்படிச் சந்திக்கு அருகில் BCAS Campus இற்கு பக்கத்து லேன்)**

**021 222 9306, 077 138 7596, 071 9999 306**


# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1930



மறைவு 07 . 05 . 2024

## சோமசுந்தரம் சறோஜினிதேவி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சறோஜினிவில்லா ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும், தற்போது மெல்பேர்ன் அவுஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமாகிய சரோஜினிதேவி சோமசுந்தரம் அவர்கள் நேற்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் ஆருயிர் மனைவியும், பாலச்சந்திரா, வாசுகி, விக்னேஸ்வரன், தேவகி, அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், பூபாலசிங்கம், கௌசல்யா, மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை மெல்பேர்ன், அவுஸ்திரேலியாவில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**076 833 6394**

(CS 00437) (S-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவும் நிலையில், வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு. பூநகரி பிரதேசசபையால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. (ம-113)

# கிளிநொச்சியில் விபத்து இளைஞர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, மே 8

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். சௌந்தரநாயகம் புவலரசன் (வயது -27) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்து, வீதியால் நடந்துசென்றவர் மீது மோதியதாக வும், அந்த இளைஞர் சடுதியாக வீதியைக் கடக்க முற்பட்ட வேளையிலேயே இறப்புச் சம்பவித்ததாகவும் தெரியவரு கின்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (ம-113)

# ஐஸுடன் இருவர் கைது

கிளிநொச்சி, மே 8

யாழ். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் படி, ஐஸ் போதைப்பொருளை உடைமை யில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்த நகரப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப் பட்டனர். சந்தேகநபர்களிடம் இருந்து 11 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட் டுள்ளதுடன் இரண்டு சந்தேகநபர்களும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடயப் பொருள்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ள னர் என்று யாழ். பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள் ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-113)

## சேவை நலன் பாராட்டு

நாட்டு நிலைமை காரணமாக தமிழ் மக்கள் அனுபவித்த துயர நாள்களில் அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றிய

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

**உயர்திரு Dr. கேதீஸ்வரன் ஐயா**

அவர்களின் சேவையை பாராட்டி வாழ்த்துவதோடு அவரது எதிர்காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**வாழ்த்துவோர்:**

**மாதகல் மக்கள் சார்பில்**

**மாதகல் சமூக சுகாதார நிலையம், மாதகல்.**

(cs.549801) (N-1)

# பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு நினைவு தினம்

யாழ்ப்பாணம், மே 8

பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேரா சிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் நூற்றாண்டு நினைவு தினம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் அருங்காட்சியகத்தில் இன்று பி.ப. 3.30 மணிக்குத் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளது. (ப-66)

## கேள்வி அறிவித்தல்
## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## சபைநிதி வேலைத்திட்டம் -2024

1. தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை. நெளுக்குளம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு. சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் 04/2016(iii)ம் இலக்க 2021.02.18 ம் திகதிய பொதுநிதிசுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை வடமாகாணத்தில் மேற்கொண்டிருத்தல் வேண்டும்
4. தேவையான தகமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம் வவுனியா (தொலைபேசி: 0242225737. தொலைநகல்- 0242050067. மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2024.05.08 திகதியிலிருந்து 2024.05.21 வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை. நெளுக்குளம் எனும் அலுவலகத்தில் 2024.05.08 ஆம் திகதியிலிருந்து 2024.05.21 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3500/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை. நேரிய குளம் வீதி. நெளுக்குளம். வவுனியா எனும் முகவரிக்கு 2024.05.22 ஆம் திகதி 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி பிணை செல்லுபடியாகும் காலம். கேள்விப் பிணைவைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/43(5) 5.5/ C/ Package -01 /2024 | **வீதி திருத்தம் தொகுதி – 01** சாந்தசோலை 3 ஆம் ஒழுங்கை, காத்தார்சின்னக்குளம் வீதி 4 ஆம் ஒழுங்கை மகாறம்பைக்குளம், வேப்பங்குளம் அரசமுறிப்பு வீதி | 2.49 | 90 நாட்கள் | C8, C7 and C9 highway | 63 நாட்கள் | 25,000.00 | 2024.08.21 |
| NP/14/43(5) 5.5/ C/ Package - 02/2024 | **வீதி திருத்தம் தொகுதி – 02** தரணிக்குளம் 4,6,8ஆம் ஒழுங்கைகள், கோவில்மோட்டை உள்ளக வீதி, அரபாநகர் சுடலை வீதி கற்பகபுரம் 4 ஆம் ஒழுங்கை | 3.34 | 90 நாட்கள் | C8, C7 and C9 highway | 63 நாட்கள் | 33,500.00 | 2024.08.21 |
| NP/14/43(5) 5.5/ C/ Package - 03/2024 | வீதி திருத்தம் தொகுதி – 03 உக்குளாங்குளம் 1 ஆம் ஒழுங்கை, கந்தபுரம் 5 ஆம் ஒழுங்கை, மணிபுரம் சுந்தரபுரம் வீதி | 2.50 | 90 நாட்கள் | C8, C7 and C9 highway | 63 நாட்கள் | 25,500.00 | 2024.08.21 |
| NP/14/43(5) 5.5/ C/ Package - 04/2024 | **வீதி திருத்தம் தொகுதி – 04** ஆசிகுளம் 5 ஆம் ஒழுங்கை, சமளன்குளம் அம்மன் கோவில் வீதி | 1.66 | 90 நாட்கள் | C8, C7 and C9 highway | 49 நாட்கள் | 17,000.00 | 2024.08.07 |

9. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2024.05.15 ம் திகதி 14.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நெளுக்குளத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நெளுக்குளம், வவுனியா .**

(cr.42351) (N-1) **2024.05.08**

# ரெலோ தலைவரின் நினைவேந்தல்




வவுனியாவில்

வவுனியா, மே 8

தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவ ரின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு வவுனியாவிலுள்ள சிறீ ரெலோ கட்சி யால் நேற்றுமுன்தினம் மாலை கடைப் பிடிக்கப்பட்டது.

1986ஆம் ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக் கத்தின் தலைவர் சிறீசபாரத்தினம் அவர் களின் 38வது நினைவேந்தல் மூத்த தளபதிகளில் ஒருவரான சங்கர் தலை மையில் இடம்பெற்றிருந்ததுடன் முதலா வது ஈகைச்சுடரையும் அவரே ஏற்றி வைத்திருந்தார். அவரைத் தொடர்ந்து சிறீசபாரத்தினத்தின், மெய்ப்பாதுகாவல ரும் ரெலோ அமைப்பின் மூத்த தளபதி களில் ஒருவருமான அஜித் கலந்து கொண்டு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். (ஒ-18)



மன்னாரில்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் சிறி சபாரத்தினத்தின் 38ஆவது நினைவுதினம் மன்னாரில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

நினைவு அஞ்சலி நிகழ்வானது தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலை மையில் இடம்பெற் றது. (ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் குருதிக்கொடைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 8

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தி யாழ். பல்கலைக்கழகத்தில் குருதிக் கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தி இம்முறை 'குருதியால் தோய்ந்த நம் தேசத்துக்காய் ஒரு துளி குருதி!' எனும் தொனிப்பொருளில் குருதிக்கொடை முகாமை ஏற்பாடு செய்துள்ளது.

குருதிக் கொடை முகாம் நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாள்களில் ஒரு நாள் நடைபெறு மெனவும், இதுதொடர்பான உத்தியோகபூர்வ திகதி பின்னர் அறி விக்கப்படுமெனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ம-66)

# வங்கிக் கணக்கிலிருந்து திருட்டு: மத்திய வங்கி அக்கறையில்லை

ஒரு பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் வங்கிக்கணக்குகளி ருந்து ஒன்லைன் மூலம் திருடப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய வங்கி அக்கறையின்றி செயற்படுகிறது என நாடாளுமன்ற உறுப் பினர் காமினி வலேபொட குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் ஆயிரம் வங்கிக் கணக்குகளிலிருந்து திறன்பேசிச் செயலி கள்மூலம் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட பணம் உள்ளூர் தனியார் வங்கி ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்தப்பணத்தில் ஒரு பகுதி கிரிப்டோ நாணயமாக மாற்றப்பட்டு வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இது குறித்து நான் ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றினேன். மத்திய வங்கியும் நிதிய மைச்சும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வெறுமனே எச்சரிக்கைகளை மட்டும் விடுத்துக் கொண்டிருக்கின்றன - என்றார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய, இந்த விடயத்தில் தீர்க்கமானதொரு விசாரணை விரைவில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (ம-6)


## பெறுகைகளுக்கான அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்**
**வாகன சுத்திகரிப்பு சேவை மற்றும்**
**வளிச்சீராக்கி திருத்தமும் பராமரிப்பும் சேவை - 2024**

யாழ்ப்பாணம் பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமை வாய்ந்த வாகன சுத்திகரிப்பு சேவை மற்றும் வளிச்சீராக்கி திருத்தமும் பராமரிப்பு நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை மற்றும் வளிச்சீராக்கி திருத்தமும் பராமரிப்பும்

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | கேள்வி உத்தரவாதமுறி | கேள்வி திறக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 01. | NP/RDHS/VS/2024 | வாகன சுத்திகரிப்பு | 100,000.00 | 21.05.2024 மு.ப 10.30 |
| 02 | NP/RDHS/ACS/2024 | வளிச்சீராக்கி திருத்தமும் பராமரிப்பும் | 100,000.00 | 21.05.2024 மு.ப 10.30 |

வாகன சுத்திகரிப்பு சேவை மற்றும் வளிச்சீராக்கி திருத்தமும் பராமரிப்பு ஒவ்வொன்றுக்கும் மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 3000.00 செலுத்தப்பட வேண்டும்.

1. விலைக்கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
2. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் இல **572/3** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம் **021 222 2278 / 021 222** 4557 மூலம் பெற்றுகொள்ளலாம்.
3. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப்பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கமுடியாத வைப்புத்தொகையாக ரூபா 3000.00 இனை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 09.05.2024 தொடக்கம் 20.05.2024 வரையான காலப்பகுதியில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் 21.05.2024ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குறித்த விண்ணப்பங்கள் 21.05.2024 காலை 10.30 மணிக்கு அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்தியபெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
தொலைநகல்: **021-222-9971**
மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail.com

(cr.42345) (N-1)



## அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

தோற்றம் 10 . 07 . 1941



மறைவு 08 . 04 . 2024

கடந்த 08.04.2024 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**கிருஷ்ணபிள்ளை கனகாம்பிகை (சரசு)**

அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதுக்கலட்டி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

குடும்பத்தினர்
077 468 7843

(CS/28122) J-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 06 . 1949



மறைவு 06 . 05 . 2024

**தர்மலிங்கம் கமலாதேவி**

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் கமலாதேவி கடந்த திங்கட்கிழமை (06.05.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், கந்தையா தர்மலிங்கம் (முன்னாள் உபதவிசாளர், வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்) அவர்களின் அன்பு மனைவியும், வைத்திலிங்கம், இலட்சுமி, பராசக்தி, காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும், கமலலோஜினி (சுவிஸ்), சிவநாதன் (கனடா), சிறீகரன் (ஆசிரியர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவண பவனந்தன், மிருநாளினி, நிஷாநந்தினி (தேசிய சேமிப்பு வங்கி மேற்தரக் கிளை யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும், பிரியதர்சினி, பிரவீந், பிரஷா, பிரமிலன், பிரணவி, ஹரீஷன், பிரஹர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த.சிறீகரன் (மகன்)
077 958 6955
(ஆசிரியர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

(CS/54973) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணல்...

விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு டிப்பர் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.
தடை விதிக்கப்பட்ட பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டமைக்காகவே ஆறுபேரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், டிப்பர் வாகனங்கள் சட்ட நடவடிக்கைக்காகப் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)

# விவசாயப் பயிற்சித் திட்டத்துக்கு 2,000 விவசாயிகள் உள்ளீர்ப்பு!

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



மிகக்குறுகிய காலத்தில் விவசாயப் பயிற்சித் திட்டத்துக்காக 2 ஆயிரம் விவசாயிகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர் என்று வடமாகாண ஆளு நர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.
கைதடியிலுள்ள வடமாகாண பிரதம செயலாளர் செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற விவசாயப் பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வைத்தே ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நவீன விவசாயப் பொறிமுறை தொடர்பான அறிவை இந்தத் திட்டத்தினூடாக விவசாயிக ளுக்குப் பெற்றுக்கொடுக்கின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம். விவசாயம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாகும். இதற்காக மத்திய, மாகாண அமைச்சுகளுடன் யாழ். பல்கலைக்கழகமும் இணைத்து செயற்படுகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது. விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்து பல சந்தர்ப்பங்களில் பேசப்படுவதில்லை. சாமானிய பொதுமகன் ஒருவர் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவே நான் விரும்பு கின்றேன். பொதுமக்களுக்கான நிலையான மற்றும் சிறந்த சேவையை வழங்க நாம் ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியம் - என்றார். (ம-26)

## ஜனாதிபதித்...

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர,
"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பணம் கொடுக்கமுடியாது என்று அரசு சொல்கிறது. ஆனால், அரசு பரவலாக்கப்பட்ட நிதியின் கீழ் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.
அதன் பிரிவு 8.3 இன் படி, இந்த அபிவிருத்தித் திட்டங்களை ஜூலை 31க்குள் முடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு வருட வேலையை ஏழு மாதங்களில் முடிக்குமாறு கூறப்பட்டுள்ளது. இது ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டம் என்பது தெளிவாகின்றது. எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட நிதியில் இருந்து யாருக்கும் பணம் கொடுப்பதில்லை. உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசாங்கத்திடம் பணமில்லை என்கிறார்கள். பிரதமரே, இந்த முற்றிலும் தவறான செயல்முறையை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துங்கள்" - என்றார்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,
"அவர் என்ன நிதியைப் பற்றிப் பேசுகின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. அபிவிருத்திப் பணிகளையா நீங்கள் நிறுத்தச் சொல்கிறீர்கள்? உள்ளூராட்சி சபைத் தேர்தல் மாத்திரமன்றி மாகாண சபைத் தேர்தலும் பிற்போடப்பட்டுள்ளது. ஆனால், அரசமைப்பின் பிரகாரமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அந்தப் பணி ஜனநாயக முறையில் செய்யப்படுகிறது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எம்.பி.க்களுக்கான எந்த ஒதுக்கீட்டையும் அரசு ஒதுக்கவில்லை" - என்றார். (அ-ம-44)

## மல்லாகம்...

யாழ். மல்லாகம் பகுதியில் உரிய அனுமதிகள் இன்றி, கொல்களம் ஒன்று இயங்கி வருவதாக சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொலிஸாருடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் சம்பவ இடத்துக்குச் சென்று கொல்களத்தை முற்றுகையிட்டதுடன், அங்கிருந்து இரண்டு மாடுகளையும் மீட்டனர். அத்துடன் கொல்களத்தில் இருந்து மாடுகளை வெட்டப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் மீட்கப்பட்டன.
மீட்கப்பட்ட சான்றுப் பொருள்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் பாரப்படுத்தியபோது மாட்டையும், கன்றையும் தெல்லிப்பழையில் அமைந்துள்ள அன்பு இல்லத்தில் வைத்துப் பராமரிக்க நீதிவான் உத்தரவிட்டதுடன் கொல்களத்தின் உரிமையாளரை நேற்றையதினம் மன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டிருந்தார்.
நேற்றையதினம் குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது கொல்களத்தின் உரிமையாளர் நீதிமன்றத்தில் முன்னிலையானார். விசாரணைகளையடுத்து அவரை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு மன்று அனுமதியளித்தது. அத்துடன் கொல்களத்தைச் 'சீல்' வைத்து மூடவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
அத்துடன் குறித்த கொல்களத்தில் மாடுகள் கடத்தி வரப்பட்டு இறைச்சியாக்கப்பட்டதா? இறைச்சியாக்கப்பட்ட மாடுகள் திருடப்பட்ட மாடுகளா?, பசு மாடுகளும் இறைச்சியாக்கப்பட்டுள்ளதா? போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-66-125)

## உள்ளகப்...

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் மாணவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகசித்தமருத்துவ பீடத்தின் மாணவர்களாகிய நாம் சித்தமருத்துவ பீடத்தில் 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எமது கற்கையைப் பூர்த்தி செய்திருந்தோம்.
5 வருடங்கள் பல்கலைக்கழக கல்வியாகவும், கட்டாய உள்ளகப்பயிற்சி ஒரு வருடமாகவும் இந்தக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் எங்களின் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்துள்ளபோதிலும் கடந்த இரண்டு வருடங்களாக உள்ளகப் பயிற்சிக்காகக் காத்திருக்கின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமல்லாமல் கிழக்குப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், கம்பஹா பல்கலைக்கழகம் என ஒட்டுமொத்தமாக 360 மாணவர்கள் இந்த உள்ளகப் பயிற்சிக்காகக் காத்திருக்கின்றனர். ஆனால், மாணவர்களுக்குத் தொடர்ச்சியாக அநீதியே இழைக்கப்பட்டுள்ளது.
அனைத்து மாணவர்களுக்கும் உள்ளகப் பயிற்சி வழங்கப்படவேண்டும் என்பதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நியதியாக இருக்கின்றபோதிலும், திறமைச் சித்தி அடிப்படையில் 60 மாணவர்களுக்கு மட்டுமே தற்போது இந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது. எனினும் ஏனைய மாணவர்கள் என்ன செய்வது?
நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற சுதேச மருத்துவத்தைப் பாதுகாக்கும் விதமாகவும், வளப்படுத்தும் விதமாகவும் துறைசார் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றனர். (அ-ம-125)

## ஜே.வி.பி...

பினரான ரோஹித அபேகுணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:-
"ஜே.வி.பி.யில் இருந்து விமல் வீரவன்ஸ வெளியேறினார். அதன்பின்னர் சோமவன்ச அமரசிங்க சென்றார். மற்றுமொரு குழு பிரிந்துசென்று முன்னிலை சோஷலிஸக் கட்சியை உருவாக்கியுள்ளது. விரைவில் ஜே.வி.பி.க்குள் மேலும் பிளவுகள் ஏற்படும்" - என்றார். (அ-ம-44)

## இளையவர்கள்...

லாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தமிழர் தாயகத்தில் 30 வருடங்களாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் மௌனித்து விட்டதே தவிர, இனத்துக்கான போராட்டம் தொடர்ந்துகொண்டே உள்ளது. போராட்டம் உச்ச நிலையில் இருந்தபோது முள்ளிவாய்க்காலில் பலர் கொல்லப்பட்டனர். அன்றைய நாள்களில் மக்களின் பிரதான உணவாகக் கஞ்சியாகவே காணப்பட்டது.
எமது இனத்துக்கு நிகழ்ந்த துயரங்களை நாங்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி ஊடாகவும், அர்த்தமுள்ள அஞ்சலிப்புகள் ஊடாகவும் இளைய சந்ததிக்குக் கடத்த வேண்டும். இவ்வாறானதொரு நோக்கத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதியின் ஏற்பாட்டில் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9 மணிக்கு தமிழராய்ச்சிப் படுகொலை நினைவுத் தூபிக்கு அருகில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்படவுள்ளது.
அதனைத் தொடர்ந்து வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் என ஏனைய இடங்களிலும் தமிழரசுக் கட்சியால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படும் - என்றார். (அ-ம-125)

## 65 கிராம...

அலுவல்கள் அமைச்சால் நியமனத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் கிராம அலுவலர் நியமனத்துக்காக 65 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை காலை அலரிமாளிகையில் வைத்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-66)

## முதலில்...

பொன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. எனினும் அரசமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முடிவிலேயே ரணில் உறுதியாக இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. (அ-ம-44)

## கருத்துச்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விசா பிரச்சினை குறித்து அண்மையில் விமான நிலையத்தில் கருத்துத் தெரிவித்த சந்தரு குமாரசிங்கவை பொலிஸுக்கு அழைத்து அது குறித்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இலங்கை என்பது பொலிஸ் இராஜ்ஜியமல்ல. இது ஏகாதிபத்திய நாடல்ல. இது ஜனநாயக நாடு. பேச்சுச் சுதந்திரம் இருப்பதால் அவருக்கு இடையூறு விளைவிக்கமுடியாது. அவரைத் தொந்தரவு படுத்தவேண்டாம் - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜஸ்தானை தோற்கடித்து பிளேஓவ் ஓட்டத்தில் டெல்லி

டெல்லி, மே 8

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தானைத் தோற்கடித்து பிளேஓப் ஓட்டத்தில் தன்னைத் தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது டெல்லி.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணிக்கு ஆரம்ப வீரர் ஜக் ப்ரேசர் 20 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து மிரட்டினார். மற்றொரு ஆரம்ப வீரரான பொரெல் 36 பந்துகளில் 65 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க டெல்லி அணி ஓவருக்கு 10 ஓட்டங்களுக்கும் அதிகமான சராசரியுடன் ஓட்டக்குவிப்பை மேற்கொண்டது. பின்வரிசையில் ஸ்ரப்ஸ் 20 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் 221 ஓட்டங்களைப் பெற்றது டெல்லி.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான ஜெய்ஸ்வால் 4 ஓட்டங்களுடனும், பட்லர் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். அணித்தலைவர் சாம்சன் அற்புதமாக ஆடினார். அவர் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய அனைத்து ஏது நிலைகளும் இருந்தபோது எல்லையில் வைத்து எல்லைக்கோட்டுடன் கால் தொடுகையுற்று மேற்கொள்ளப்பட்ட பிடியெடுப்பை ஆட்டமிழப்பு என்று அறிவித்தார் நடுவர். 46 பந்துகளில் 86 ஓட்டங்களுடன் சாம்சன் ஆட்டமிழந்தார்.

இந்த இலக்குச் சரிவே ராஜஸ்தானுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது. சாம்சன் களத்தில் நின்றபோது இருந்த வேகம் ராஜஸ்தானின் இன்னிங்ஸில் பின்னர் இல்லாமல் போக 201 ஓட்டங்களை மட்டுமே பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது ராஜஸ்தான். (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

தொடர்பு :- 077 886 2927

(CS/375) J-1

## மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு

கிளாலிச் சந்தியில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் (2Km) தூரத்தில் ஆறு ஏக்கர் (6ஏக்கர்) மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. அக்காணி நான்கு பக்கமும் 10 அடிக்கு ஒரு தூண் போட்டு ஏழுவரி கம்பி அடித்து கேற்றும் போட்டு பாதுகாப்பாக உள்ளது.

தொடர்பு:- 077 649 1027

(CS/54977) J-1

## நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் இன நாய்க்குட்டிகள் (ஆண்/பெண்) விற்பனைக்கு உண்டு.

பூச்சி மருந்து கொடுக்கப்பட்டு, ஒரு ஊசி போடப்பட்ட, 48 நாட்கள் வயதுடையவை.

இடம் :- பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கோப்பாய்

075 042 7547, 076 200 1700

(CS/54978) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 864 9878, 077 634 3103

(CS/54942) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரத்தில் அமைந்துள்ள பிரபல ஹொட்டல் (Hotel) ஒன்றிற்கு சமையலறை சுத்திகரிப்பாளர்கள் தேவை.

தொடர்பு:- 070 745 8567

(CS/54976) J-1

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(CS/54971) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 08 . 1938

மறைவு 07 . 05 . 2024

### செல்வி கமலேஸ்வரி வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கமலேஸ்வரி வல்லிபுரம் அவர்கள் நேற்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - வைரவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, சிவபாக்கியநாதன், சிவசுந்தரம் நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இராசையா, அன்னபூரணம் மற்றும் தவமணி, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை யாழ். பிரதான வீதியில் உள்ள White House மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மருமகன்கள்
சி.செல்வன்
சி.கேதீஸ்
0777 834603

(CS 438) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 05 . 1940

மறைவு 07 . 05 . 2024

### பூபதி சுப்பிரமணியம்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பூபதி சுப்பிரமணியம் நேற்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் மனைவியும், செல்வி தயாளினி (ஆசிரியர் - யாழ்/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் விஜயலட்சுமி, சுந்தரலிங்கம், சிவபாக்கியம் (கனடா), செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, பாலசிங்கம் மற்றும் பார்வதிப்பிள்ளை, பத்மநாதன், ஜெகதீஸ்வரி காலஞ்சென்றவர்களான சோதிப்பிள்ளை, புஸ்பராணி, கந்தசாமி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் கணவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மாத்தறை கம்புறுப்பிட்டிய பல்கலைக்கழக பிரிவெனாவின் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் காலஞ்சென்ற பூபதி குடும்பத்துடன் நீண்டகாலம் கம்புறுப்பிட்டியவில் வாழ்ந்தாரென்பது நினைவு கூரத்தக்கது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தொடர்பு:-
077 023 7594
077 613 7503

(CS/54975) J-1

தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.